Registered as a News Paper பக்கங்கள்: 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 26 (11 - 09 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை 206

## நஷ்டஈட்டு கொடுப்பனவு திடீரென இடைநிறுத்தம்

வன்செயல்களினாலும் இராணுவ நடவடிக்கையினாலும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் அரச ஊழியருக்கு வழங்கப்பட்டு வந்த நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் அனைத்தும் திடீரென இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளது என புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது திறைசேரியில் ஏற்பட்டு உள்ள நிதி நெருக்கடி காரணமாகவே இக் கொடுப்பனவுகளை தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மேற்படி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# கிளிவெட்டி ஆற்றில் குண்டுவெடிப்பு
# ராணுவ வண்டி 'பெரி'யுடன் தகர்ப்பு;
# 21 படையினர் பலி; 3 படுகாயம்

## 10 பொது மக்களும் இறந்ததாக தகவல்

(கொழும்பு)

கிளிவெட்டியிலிருந்து மூதூருக்கு இராணுவ 'றக்' வண்டியையும் இராணுவத்தினரையும் ஏற்றிச் சென்ற 'பாதை' ('பெரி') புலிகளால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இத்தகர்ப்பின் போது 21 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் றக் வண்டி முற்றாகச் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இக்குண்டு வெடிப்பில் 10 பொதுமக்களும் கொல்லப்பட்டதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

நேற்றுமாலை 3.30 மணியளவில இச்சம்பவம் இடம்பெற்றது. 24 இராணுவத்தினரும, றக் வண்டியும் சென்ற இப்'பாதை'யில் (பெரி)பத்துப் பொதுமக்களும் ஏற்றிச் செல்லப்பட்டதாகத் தெரியவருகின்றது,

இக்குண்டு வெடிப்பில் 21 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் மூவர் படுகாயமடைந்த நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது இதேவேளை இப்'பாதை'யில் (பெரி) ஏற்றிச் செல்லப்பட்ட 10 பொது மக்களும்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## பாதுகாப்பு அமைச்சராக ரணில் நியமிக்கப்படலாம்?

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சராக ரணில்விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளதாக ராவய என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## முத்தமிழ் விழா மலர் இன்று வெளியீடு

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுககழகம் நடாத்தும் முத்தமிழ் விழா மலர் வெளியீட்டு வழாவும், கலை வெளிப்பாட்டு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிககு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் கலை பண்பாட்டுக் கழகத் துணைப்பொறுப்பாளர் திரு. தேவர் அவர்கள் தலைமையில நடைபெறுகின்றது.

தமிழ் வாழ்ததுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வில் பண்டிதர் வீ. பரநதாமன் அவர்கள் தலைமையில நடைபெறும் 'எழுதாத கை உலக்கை, எனும் கருத்தரங்கில் செம்பியன் செல்வன், கலாநிதி சபா ஜெயராசா, சி.சிவலிங்கராசா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றுகின்றனர்.

திரு. தேவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் மலர் வெளியீட்டில் திரு.மவ இளங்குமரன வெளியீட்டுரையையும் திரு வி. பி. சிவநாதன், திரு. சொக்கன் ஆகியோர் ஆய்வுரைகளையும, திரு. சிதம்பர திருச் செந்திநாதன் அவர்கள் பதிலுரையையும நிகழ்த்துவர்.

''தாயை நிகரெங்கள தாயகத்தைக் காதல் செய்'' என்ற தலைப்பிலான கவியரங்கு திரு புதுவை இரத்தினதுரை அவர்கள தலைமையில் இடம் பெறுகின்றது. இக் கவியரங்கில் திரு.. யோகரத்தின்ய்யோகி,

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## தமிழீழக் காவல்துறை பயிற்சி முடித்த 2-வது அணி வெளியேற்றம்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ காவல் துறையின் பயிற்சியை முடித்துக்கொண்ட இரண்டாவது அணி நேற்று வெளியேறியது.

பயிறசியை முடித்து வெளியேறும் வைபவம் நேற்றுக் காலை 7.15 மணியளவில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர் பயிற்சியை முடித்த காவல் துறை உறுப்பினர்களது மரியாதை அணி வகுப்பை தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் ஏற்றுக்கொண்டார்.

## ஜனாதிபதியின் பாதுகாப்பு பயிற்சிபெற்ற பொலிஸிடம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி மாளிகைக்கு பாதுகாப்பு அளித்துவந்த சிறிலங்கா இராணுவத்தினர் அனைவரும் திடீரென இடைநிறுததப்பட்டு அந்த இடத்திற்கு விசேட பயிற்சிபெற்ற பொலிசார் நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்திடீர் மாற்றம் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அச்செய்திகள் மேலும் தெரிவிககின்றன.

[8 ஆம் பக்கம் பார்க்க]



மணலாற்றில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித்தாக்குதலின் போது கைப்பற்றிய ஆயுதங்களின் ஒருதொகுதி. மேலும், ஒரு தொகுதியை கடைசிப்பக்கத்தில் பார்க்கலாம்.

## பிரபாகரனே தமிழரின் வீரம் மிகுந்த தலைவர்

### -- ராம்தாஸ்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே தமிழர்களின் வீரம் மிகுந்த தலைவன் என்பதை பாட்டாளி மக்கள் கட்சி கருதுகின்றது என அக்கட்சியின் தலைவர் திரு. எஸ் ராம்தாஸ் தெரிவித்தார். நேற்று மேற்படி கட்சியின் மூன்று நாள் மாநாடு சென்னையில் ஆரம்பமானது இதன்போது அம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இலங்கை அரசின் கொள்கைகளை ஏற்று இந்திய அரசும் தமிழ்மக்களின் உரிமைகளை வழங்க மறுத்தால் தமிழகமும் மற்றொரு ஈழமாகமாறுவதை யாராலும் தடுக்க முடியாது.

இம் மாநாட்டின் விவாதப் பொருளாக ''தமிழ் மக்கள் வாழ்வதற்கான உரிமை என்பது ஏன் மறுக்கப்பட்டது''

(8 ஆம் பக்கம் பார்க்க)

மங்களகரமான

திறப்பு விழா

சுபநேரம்:- புரட்டாதி மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணி.

கயல்விழி நகைப் பூங்கா

224 / B, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்

து புலேந்திரன்

(3159)

## வரி விளம்பரம்

**விற்பனையாகின்றன**

இலகு ஆங்கிலம் (ஆண்டு 4, 5, 6) ரூ. 19-50. இலகு தமிழ் இலக்கணம் ரூ.12. 50 'தமிழ்த் தென்றல்' யாதுமூரானின் கவிதைகள் ரூ. 20-00. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். வே. நவமோகன், 'பொற் கமலதேவி பதிப்பகம்' திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் (3157)

**இன்று (குரு) வியாழ மாற்றம்**

திருக்கணிதப்படி இன்றுவியாழன் கன்னிராசிக்குமாற்றமடைகின்றது. வியாழ மாற்றமும் பகவான் ஸ்ரீ நீல கண்டபாபா தெய்வீக வரலாறும் ரூ 8/50 விற்பனையாகின்றன, பாலாஜி புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (கணித்தவர் Prof.சத்தியதாஸன் கட்டுடை) (3160)

**கடிகாரமா? றேடியோவா?**

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு எமக்கு வேறு கிளைகள் கிடையாது டில்கா வாச்வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி/4964)

**பெற்றுக்கொள்ளவும்**

திருநெல்வேலியைச் சேர்ந்த யோககுமார் என்பவரால் நான்கு சிறிய எசன்ஸ் போத்தல் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.

★

ஏ. றோகினி என்பவரது யாழ். பல்கலைக்கழக மாணவ அடையாள அட்டையும் சிறு தொகைப் பணமும் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது உரியவர்கள் ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

★

இருமணிபேர்ஸ் கண்டெடுக்கப் பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். ஒருமணிபேர்ஸில் இருந்த அனுமதி அட்டையில் ஏ. யூலியான எனும்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அடையாளஅட்டைகள் தேக்கம்**

யாழ். பிரதம தபாலகத்தில் தபால் அடையாளஅட்டைகள் விநியோகிக்க முடியாத நிலையில் தேங்கிக் காணப்படுகின்றது. தீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களின்து அடையாள அட்டைகளே பெருமளவில் விநியோகிக்க முடியாமல் இருப்பதாகவும் தெரியவருகிறது,

இவ்வாறாக 150 அடையாள அட்டைகள் தேங்கியுள்ளதாகவும் விண்ணப்பித்து இன்னமும் பெற்றுக் கொள்ளாதவர்கள் தபாலகத்தில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப் படுகிறது. (42)

**போக்குவரத்துச் சேவை**

யாழ்.செயலகஊழியர்களின் வசதிகருதி பருத்தித்துறையிலிருந்து கச்சேரிக்கு 750 பாதையூடாக தனியார் போக்குவரத்துச்சேவையொன்று கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது-

செயலக நலன்புரிச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப் பஸ்சேவை காலை 7-15 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு 8-45 மணிக்கு கச்சேரி வந்தடைந்து மீண்டும் பிற்பகல் 3-15 மணிக்குகச்சேரியிலிருந்து புறப்படுகின்றது-

# நரிமலைப் பிரதேசத்தின் வெப்பநிலை வீழ்ச்சி

தியத்தலாவ இராணுவப் பயிற்சி முகாமிற்கு அருகேயுள்ள நரிமலைப் பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக வெளிவந்த புகையின் வெப்பநிலையில் வீழ்ச்சி காணப்படுவதாக இராணுவ பயிற்சி முகாமின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிலமட்டத்தில் இருந்து சுமார் பத்து அடிக்குக் கீழே வெப்பமாக இருப்பதாகவும் பூகர்ப்பவியல் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் டி. ஓ. கஸ்தி தலைமையிலான ஆராய்ச்சிக் குழு நேற்று முன்தினம் தொடக்கம் ஆராய்ச்சி வேலைகளில் ஈடுபட்டுள்ளது.

இதையடுத்து இப்பகுதிக்கு பொதுமக்கள் செல்வதற்கு அனுமதி தற்போது மறுக்கப்பட்டுள்ளதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்

## அறிவித்தல்

வடபிராந்திய

சுருட்டுத் தொழிலாளர் சங்கம்

சகல தொழிலாளர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் மேற்படி எமது சங்கப்பணிமனையில் வைக்கப்பட்டிருந்த பற்றுச்சீட்டுக்கள் 98, 99, 100 (9701 - 9800, 9801 - 9900, 9001 - 10000) தவறவிடப்பட்டுள்ளது. இவ்இலக்கப்பற்றுச்சீட்டுகள் 05-09-1992 அன்று நடைபெற்ற நிர்வாகசபைக்கூட்டத்தின்தீர்மானத்தின்படிசெல்லுபடி அற்றதாகக் கருதப்படும் இவ்இலக்கப் பற்றுச்சீட்டு சங்க மூலமாகவோ அல்லது தனிப்பட்ட நபர்மூலமாகவோ பெற்றிருப்பின் இப்பற்றுச் சீட்டுகளை வைத்திருப்போர்சங்கப்பணிமனையில்செயலாளரிடம்தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(சி/ 5020) நிர்வாக சபையினர்

## விக்னா கல்வி நிறுவனம்

5 2, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**O/L**

வினா விடை வகுப்புக்கள்
DAY CLASSES [8-00—2-00]
EVENING CLASSES [3 00—6 00]
Sat. Sun, CLASSES [8.00—3 00]

**ஆரம்பம்: 12-09-1992**

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
★ அலகு ரீதியாக வினாத்தாள் வழங்கி மீட்டல் செய்யப்படும்.

(சி-5033)

உளநல சேவை நிதிக்கென மருத்துவ மாணவர் வழங்கும்

## "அன்னை இட்ட தீ"

யாழ்.பல்கலைக்கழக உளமருத்துவத் துறையும் நுண்கலைத்துறையும் இணைந்து தயாரிக்கும் நாடகம்

இடம்: கைலாசபதி கலையரங்கம்
திகதி: 13-09-1992
நேரம்: பி. ப. 4 00 மணி

ரிக்கற் கிடைக்குமிடங்கள்

தேன் சுரபி சைவ உணவகம்
திருநெல்வேலி சந்தி
திருநெல்வேலி.

நாடகம் நடைபெறும் தினத்தன்று
மண்டப வாயிலிலும்.

(5031)

## வெற்றிடங்கள்


★ பொறியியல் படவரைஞர்,
★ ஒப்புநோக்குநர்,
★ மொழிபெயர்ப்பாளர்,
★ இலக்கிய எழுத்தாளர்,
★ தமிழ் வல்ல தமிழாசிரியர்,
★ கலைப்பட்டதாரிகள்,
★ பத்திரிகையாளர்கள்,

கல்வித் தகைமை, அனுபவம், சான்றிதழ்களுடன் செப்டம்பர் 20 ஆம் தேதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல.168, மே/பா ஈழநாதம், 31,மகேந்திரா வீதி,யாழ்ப்பாணம்.

(3145)

## ஓராண்டு நிறைவின் நினைவு



| இதயத்தில் ஒளியாக | இதயத்தில் இடியாக |
|---|---|
| 18 — 08 — 1958 | 25 — 08 — 1991 |

**அமரர் திரு. சிவசம்பு ஈசன்**

நீ மறைந்து ஓராண்டு
உன் நினைவு நெஞ்சில்
நீங்கவில்லை
எம் உயிர்கள் உன்னைச்
சேரும் வரை
உன் நினைவு
நெஞ்சில் வாழுமையா.

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், மனைவி, மகள்
சகோதர சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி
(3156)

## நினைவு கூருகின்றோம்..
## 1992 - 09 - 11

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**டட்லி** (க. கருணாகரன் - மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்முனைத்துறைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்ட -

**அசோகன்** [ப. ஜீவராசா - 40-ம் கிராமம், மட்டக்களப்பு]

யாழ்ப்பாணம் - நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் முகாமிட்டிருந்த இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பொறியியலாளரான ஈச்சமோட்டையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு மட்டு. - சஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேறகொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**கப்டன் குரூஸ்** (நல்லதம்பி பாக்கியராசா - கரடித் தோட்டம், காரைதீவு, அம்பாறை)

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**தயான் / தயாளன்** (இராசையா இராசேந்திரகுமார் - றெட்பானா, விசுவமடு)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**முரளி** (ஓட்டுமடம், யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு- மியாங்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக கண்ணிவெடி வெடித்ததில் எம்மைப்பிரிந்த -

**கெல்டன்** (பழுகாமம், மட்டக்களப்பு)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**அமலதாஸ்** (கணேசராசா முரளிதரன் - மூத்ததம்பி ஒழுங்கை, மானிப்பாய், யாழ்)

மணலாறு / நெடுங்கேணி, நயினாமடுப் பகுதியில் சிற்றூர்தி ஒன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழ்ப் பெணகள்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட 4 தமிழர்கள்.

ஏறாவூர்ப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

யாழ். மண்டைதீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் நிலை கொண்டு இருந்து விட்டுச் சென்றபின் இரண்டு கிணறுகளிலிருந்து இதே தினத்தில் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட 7 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கோபிநாத்** (வேலுப்பிள்ளை புஸ்பராசா - உடுவில் தெற்கு, சுன்னாகம், யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5027)

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்



# மேஜர் தாரணி

எங்கள் தாரணியை எல்லோரும் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இவள் சின்ன வயதிலேயே பெரிய பொறுப்பினைச்சுமந்து நின்றாள் எமது தேசம் விடுதலை பெறவேண்டுமென்று துடித்தவள். கூடவே சகல நிலைகளிலும் பெண்கள் முன்னேற்றமடைய வேண்டும் சகல அடக்கு முறைகளையும் தகர்த்தெறிந்து எமது தேசத்தின் வாழ்வில் அவர்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகஅயராதுஉழைத்தவள்.

இவள் வீரச்சாவு அடைந்து ஒரு வருடத்துக்கு மேற்சென்றும், அவளைத் தெரிந்தவர்களுக்கு, அவளை நேசித்தவர்களுக்கு அவளின் மறைவு இன்றுதான், இந்த நிமிடந்தான் நடந்தது போன்ற ஏசகம் - அந்த உணர்வு அவர்களுக்கே சொந்தமாகிபபோன ஒன்று.

அவள் எங்களுடன் இல்லை என்ற அந்த உணர்வு ஒவ்வொரு நிமிடமும் நெஞ்சைத் தாக்க, தாரணி இந்த நேரம் இல்லாமல் போய்விட்டாளே ... என்றும், அவள் இருந்தால் இப்படி, இப்படித்தான் இருந்திருப்பாள் என்றும், எங்களுக்குச் சந்தோஷம், கவலை வருகின்ற நேரங்களில் எல்லாம் சொல்லிககொண்டிருக்கத்தான் எங்களால் முடிகின்றது.

அவளது இழப்பை மறக்க நினைத்தும் மறக்க முடியாமல் அவளது நினைவுகளுடன் ஒன்றிப்போய் அவளது கனவைச் சுமந்து கொண்டு அவளது பிள்ளைகள் இன்றும், என்றும்......

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் முதலாவது பயிற்சி முகாமிலே இவள் இணைந்து பயிற்சி பெற்றாள். பயிறசி முகாமிலே மிகவும் அமைதியான சுபாவத்தைக் கொணடிருந்த தாரணி, எந்தக் கடினமானபயிற்சியையோ அன்றி வேலையையோ செய்து முடிககக் கூடிய அளவுக்கு மனவுறுதி படைத்தவளாகவும் இருந்தாள்.

இந்தியமண்ணில் பயிற்சியை முடிததுக கொண்டு வந்தபின் மகளிர் படையணியினர் முதல் முதல் பங்கு கொணட மன்னார் - அடமபன் நேரடி மோதலில் மிகவும் திறமையாகச் செயறபட்டாள். இச் சணடையினபோது இவளது கையில் சிறிய காயமேறபட்டது.

இதேபோனறு, இந்திய இராணுவம் எம மணணில் காலடி வைக்கும்வரை சிறிலங்கா இராணுவததுடன் நடைபெறற பல சணடைகளிலே தாரணி பங்குகொண்டு தன் ஆற்றலை வெளிப்படுததினாள்.

இலங்கை— இந்திய ஒப்பந்தம் உருக்குலைந்து, இந்திய இராணுவத்துக் கெதிரான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்ட போது உலகின் வல்லரசுடன் மோதி என்ன செய்ய முடியும் என்று பலர் திகைத்து நின்றபோது மிகவும் மனோவலிமையுடன் நின்று போரிட்டவள்.

இந்திய இராணுவத்துடன் குடாநாட்டுக்குள் நடந்த பல மோதல்களிலும், வன்னி, மணலாறு போன்ற இடங்களில் நடந்த பல மோதல்களிலும் இவள் பங்கு கொண்டிருந்தாள்.

மணலாற்றுக் காட்டுக்குள் இருக்கும் எந்த மரங்களுடன் பேசிப்பார்ததாலும், அவை ஒவ்வொன்றும் தாரணியைப் பற்றிக் கதைகதையாகக் கூறும். ஒவ்வொரு நாளும் காட்டுக்குள் அவள் நடந்த தூரம் மிக அதிகம் இந்திய இராணுவத்தால் சுறறி முற்றுகையிடப்பட்ட அந்தக் காட்டுக்குள் எங்கோ ஒரு மூலையிலிருந்து தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வருவதற்கு இவளும் இவளது தோழர்களும் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

இந்த நேரததில்தானபெண்கள் துணிந்து இயங்க வேண்டும், அவர்கள் சுயமாகச் செயற்பட வேண்டும் என்று அனைத்து நிகழ்வுகளிலும பெண்கள் தனித்துச் செயறபட விடப்பட்ட பொழுது மிகவும் ஆர்வத்துடனும் சுறுசுறுப்புடனும் செயறபட்டாள்.

இவளுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகள் எவ்வளவு கடினமானதாக இருந்த பொழுதிலும் கூட அதைச் சிரித்துக கொணடே செய்து முடிப்பாள். அவளுடன் இருந்தவர்களையும அவ்வாறே செய்யப் பழக்கினாள்.

இககாலகட்டத்தில் புதிய பயிற்சி முகாம் ஆரம்பிக்கப் பட்ட போது இவளதான் கூடுதலாகப் பிள்ளைகளைக் கூட்டிச் சென்று பொருட்களை எடுத்து வருவாள். இப்படித் தான் ஒருநாள் இவள் பிள்ளைகளுடன் பொருடகள் எடுதது வந்து கொண்டிருந்த போது பெரிய யானை ஒன்று வழிமறித்தபடி நின்றது. உடனே அவள் துப்பாக்கியால் சுட்டு யானையைக்கலைத்து விட்டாள். தாரணி இப்படித் தான் என்ன பிரச்சினை என்றாலும் யோசித்துக்கொண்டு நிற்காமல் உடனேயே துணிந்து முடிவெடுத்து விடுவாள்.

காடடுக்குள் இருந்தபோது மிகவும் திறமையாகக் கண்ணிவெடி வைக்கக்கூடிய தாரணி, எந்தக் கடினமான பயிறசியையும், வேலையையும் செய்யக்கூடிய தாரணி, திறமையாகச் சண்டை பிடிக்கக் கூடிய தாரணி இப்படித் தான் அவளை எல்லோருக்கும் தெரியும்.

மிகவும் அமைதியாக இருந்த தாரணி கலகலப்பானவளாக மாறியது இந்தக் காட்டுக்குள் தான் அவள் இருக்கும் இடத்தில் எந்த நேரமும் சிரிப்புச் சத்தம் கேட்கும் என்ன கவலையுடன் இருந்தாலும அவர்களைத் தனது கதையால் சிரிக்க வைப்பவள் இதனால் தாரணியின் தோழிகள் எப்போதும் அவளைச் செல்லமாக 'மாமி' -என்று கூப்பிட்டார்கள். அவளுடன் அந்தக் காட்டில் இருக்காதவர்களுக்குப் பெரிய ஆச்சரியம் 'தாரணியா இப்படிக் கதைக்கிறாள், பகிடி விடுகிறாள்' என்று.

அவளுடன் நெருக்கமாகப் பழகாதவர்கள், அவள் தலையைச் சிலுப்பிக்கொண்டு கதைக்கும் விதத்தைப் பார்த்து 'சரியான முரடு' என்று சொல்வார்கள் அவள் கதைப்பதைப் பார்த்தால் முரடு மாதிரித்தான் இருக்கும் அந்த முரட்டுத்தனமான கதைக்குப் பின்னால் இருக்கும் அவளது ஈரமான இதயத்தை, அவளுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு மட்டுமே தெரியும்

எந்த இடத்திலும் சரியானதைச் சரியென்று வாதிடும் துணிவு மிக்கவள் ஏதாவது வேலை என்றால் 'முடியும்' அல்லது 'முடியாது' என்று மட்டுமே சொல்லுவாள் 'செய்து பார்ப்போம்' என்று ஒருபோதும் சொன்னதே கிடையாது அதனால்தான் அவளால் பல இடங்களில் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் உறுதியாக நிறக முடிந்தது.

இந்திய இராணுவம் எமது மணணை விட்டுப்போனபின் மீண்டும் இலங்கை இராணுவத்துடனான சண்டை தொடங்கியபோது பல தாக்குதல்களிலும் பங்கு கொண்டாள்.

கோட்டை இராணுவமுகாம் எமது முற்றுகையில இருந்த போதும், பின்னர் பலாலியைச் சுற்றியுள்ள மகளிர் படையணியின் காவலரண்களுக்கும் இவள் பொறுப்பாக இருந்தாள்.

பலாலியைச் சுற்றியுள்ள ஒவ்வொரு குச்சொழுங்கைகளுக்கும் இவளைத் தெரியும். இவள் இங்கு இடையில் எழும்பாமல் தூங்கிய இரவுகள் விரல்விட்டு எண்ணலாம். இரவு எந்த நேரத்திலும் பிள்ளைகளின் நிலைகளுக்கு முன்னால் வெடிச்சத்தம் கேட்டால் இவள் அடுத்த நிமிடம் அந்த இடத்தில் நிற்பாள்.

நாங்கள் தனியாக நின்று அடிபட வேண்டும் என்ற கனவைச் சுமந்துகொண்டு பலாலி மண்ணைச் சுற்றிச் சுற்றித் திரிந்தவள். அந்த நினைவுடனேயே, அந்த மண்ணிலேயே விதையாகிப் போனாள்.

தான் உயிருடன் இருக்கும் வரை பெண் போராளிகள் நிற்கும் பக்கத்தால் இராணுவம் வெளியேறினால், ஆண் போராளிகளை அந்த இடத்துக்கு வந்து அடிபட விடமாட்டாள். நாங்கள் தனியாகத்தான் நின்று அடிபட வேண்டும் என்று சொல்லிச் சொல்லியே பெண் போராளிகளை வளர்த்தவள் இன்று அவர்கள் தனித்து நின்று அடிபடும்போது அவர்களுடைய உணர்வுகளுடன் சேர்ந்து நிற்கிறாள்.

அந்தநாள் எமது நினைவுகளில் என்றுமே மறக்க முடியாமல் போய்விட்டது. 1991 ஜனவரி 23ஆம்திகதிஅதிகாலை 3.00 மணிககுச் செய்தி வருகிறது. 'தாரணியக்காவுக்குக் காயம், வைத்தியசாலைக்கு அனுப்பியிருக்கிறோம்' என்று.

'தாரணி காய்ச்சல், தலையிடி யென்றால்கூடத் தாங்க மாட்டாள். காயத்தை என்னெண்டு தாங்கப்போறாளோ?' இப்படித்தான் எங்களால் நினைக்க முடிந்தது. எங்களின் தாரணி எங்களை விட்டு இவ்வளவு வேகமாகப் போவாள் என்று யாருமே நினைக்கவில்லை.

வைத்தியசாலையில் ஒவ்வொரு பகுதியாகப்போய் "தாரணியை எங்கை விட்டிருக்குது, தாரணியை எங்கை விட்டிருக்குது" என்று கேட்டால் ஒருவருக்குமே தெரியவில்லை. அப்பொழுதுதான் மெல்ல மெல்ல உண்மை தெரியத் தொடங்கியது, எங்கள் தாரணிக்கு நாங்கள் விரும்பாத, நாங்கள் நினைக்காத ஒன்று நடந்து விட்டது என்று.

அவளைப் பற்றி நாங்கள் நிறைய நம்பிக்கைகளை வைத்திருந்தோம். எல்லாமே ஒரு கொஞ்ச நேரத்துக்குள் சனவாகப் போனதை யாராலும் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

அவர் வீரச்சாவடைந்த செய்தி முதலில் அவளது பிள்ளைகளுக்குத் தெரியாது. 'தாரணியக்காவுக்குச் சின்னக் காயமாம். அவ எங்களை விட்டுட்டு அங்கை நிக்க மாட்டா. எப்பிடியும்ரெண்டு, மூண்டு நாளுக்குள்ள திரும்பி வந்து விடுவா' என்று தான் கூறிக்கொண்டு இருந்தார்கள். உங்கடை தாரணியக்கா உங்கடை இடத்துக்கு வரேலாத அளவு தூரத்துக்குப் போய் விட்டா' என்று பின்னேரம் தான் மெதுமெதுவாகச் சொல்லப்பட்டது இப் பொழுதும் அவளதுபிள்ளைகளது அழுகையொலி, மறக்க முடியாது காதுக்குள் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

அவளால் வளர்க்கப்பட்ட அவளது பிள்ளைகள் இன்றும் அவளது பெயரைச் சொல்லிக் கொண்டு ஒவ்வொரு சண்டைக்கும் போவதற்கு ஆயத்தப்படுத்தும்போதும், சண்டையின்போதும் 'எங்கட தாரணியக்கா இப்ப உயிரோட இருந்திருந்தால்' இதற்குப்பிறகு அவர்கள் வாயால் எதுவும் சொல்வதில்லை. ஏனென்றால் அவர்கள் சொல்ல வருவது அவர்களது முகத்திலும் பெருமூச்சிலும் நிறைந்திருக்கும்.

'நாங்கள் தனிய நின்று அடிபட வேணும்' என்ற இவளது கனவை எங்கள் செயல்களினூடாக நனவாக்கி வருகின்றோம்.

— துளசி




# ஆங்கில குற்றவாளிகளின் குடியேற்றத்தால் அவுஸ்திரேலிய பூர்வீக குடிகள் அழிந்தன

அவுஸ்திரேலியாவில் 1778 ஜனவரி 26இல் குற்றவாளிக் குடியிருப்புககளை நிறுவியதில் இருநது அங்கு படிபபடியாக ஆங்கிலக் குடியேற்றங்கள் ஏற்டுத்தப்பட்டன இதனால் அங்கு வாழ்ந்து வந்த மூன்று லட்சத்துக்கும் அதிகமான பழங்குடி மக்கள் பாதிக்கப் பட்டனர்.

அவுஸ்திரேலியாவை 1770 இல் முதன் முதலாக கண்டறிநததாக அறிவித்த ஆங்கிலேயர்கள் 1788இல் தமது நாடடு குற்றவாளிகளை குடியேற்றியதன்மூலம் இங்கிலாந்தின் உரிமையை அங்கு நிலை நாட்டினர்.

40,000 வருடங்களுக்கும் அதிகமாக அங்கு வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் தான் அநதப் பழங்குடி மக்கள். இருபத்தைந்து முப்பது பேர் கொண்ட குழுக்களாக வாழ்ந்த இவர்கள், அடிப்படையில் மிகவும் சாதுவானவர்கள் நிலத்தைத் தனியுடைமை யாகச் சொந்தம் கொண்டாடும் பழக்கம் இவர்களிடையே இல்லாததால், மொத்த நிலப்பரப்பிலும் பரந்து திரிந்து வாழ்ந்து வந்தனர்.

ஆங்கிலேயர்களின் வருகை இவர்களின் அமைதியான வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இவர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப் பட்டனர். மேலும் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியான புதிய நோய்களும் இவர்களைப் பிடித்தன. இவர்கள் ஆங்கிலேயர்களால் விரட்டி, விரட்டி அடிக்கப்பட்டனர்.

அவுஸ்திரேலியாவைக் குற்றவாளிகளுக்கான இடமாக மட்டுமே வைத்திருக்காமல் நிலத்தைப் பங்கு போட்டு விற்றால் லாபம் கிடைக்கும் என்பதை வைத்து ஆங்கிலேய அரசு புதிய குடியேற்றப் பகுதிகளை அறிவிததது நிலங்கள் விற்கப் பட்டன. 1841க்குள் இவ்வாறு குடியேறியவர்களின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்துக்கும் அதிகம் குறறவாளிகளாக ஆங்கிலேய அரசாங்கத்தால் அனுப்பப்பட்டவர்கள் ஒரு லட்சத்து அறுபதாயிரம் பேர் "இருக்க இடம் கொடுத்தால் இளைக்கு இரண்டு ஆடு கேட்குமாம் நரி" என்பது போலத் தான் அவுஸ்திரேலியாவில் நடந்தது.

வந்து குடியேறியவர்களின் சொந்த நாடாகிவிட்ட அவுஸ்திரேலியாவின் புதிய அரசு. ஏற்கனவே வாழ்ந்து வந்த பூர்வ குடியினருக்கு அவர்கள் வழ்வதற்கு லைசென்ஸ் முறையை அறிவித்தது. அதற்கு ஆண்டு தோறும் கட்ட வேண்டிய தொகை பத்துப் பவுண்டு. இவர்கள் வாக்குரிமையுடன் கூடிய அவுஸ்திரேலிய குடிமக்களாக அறிவிக்கப் பட்டது 1968 இல்தான்.

அவுஸ்திரேலியாவில் நிறைய கனிவளம் இருப்பதை அறிந்ததால் ஆங்கிலேயர்கள் மட்டுமன்றி பிற ஐரோப்பிய நாட்டினரும் வந்து குடியேறினர் வாழ்க்கை மற்றும் தொழில் வளர்ச்சிக்காகப் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

ரயில்கள், தபால் முறை. பிறபோக்குவரத்து வசதிகள் வந்தன. வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்து குடியேறுபவர்களின் எண்ணிக்கையைத் தடுப்பதற்காக 'வெள்ளையர்கள் மட்டுமே குடியேற வேண்டும்' என 1901 ஆம் ஆண்டில் சட்டம் கொண்டு வந்தனர்.

இந்த முன்னேற்றங்கள் ஒருபுறம் நடக்க, மறுபுறம் அவுஸ்திரேலியப் பழங்குடியினர் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். சுரங்கங்கள் தோண்டுவதற்காக நாட்டின் பெரும் பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டன. அங்கு வாழ்ந்த பழங்குடியினர் விரட்டியடிககப்பட்டனர்.

நிலத்தை மிகவும் புனிதமாகக் கருதி வழிபடும் பழங்குடியினர் அவர்கள் வழிபடும் இடங்களிலாவது சுரங்கம் தோண்டாமலிருக்கும் படி கேட்டுப் பார்த்தனர். பெரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# அதிர்வு

**சாந்தன்**

காலையில் திறந்தநேரத்திலிருந்து கடையில் வியாபாரமும் அதிகமில்லை.

வழமையிலும் பார்க்கத் தெருவில் போக்குவரத்து அதிகரித்திருந்தது. பயமும் பரபரப்பும் பதற்றமுமாய்ச் சனங்கள்......

வடக்கே வெடிக்கும் குண்டுகளும் உறுமல்களுமாய் பிறகும் பிரச்சினை! கொஞ்ச நாட்கள் நிலவியிருந்த சாதாரண நிலை மாறிவிட்டது-

சாதாரணம்! எது சாதாரணம்? எது சாதாரணம்? -பொன்னையனுக்குச் சிரிப்பு வந்தது-

போகிற போக்கில் மத்தியானத்துடன் கடையைப் பூட்ட வேண்டும் போலிருக்கிறது.

இடைக்கிடை மோட்டார் சைக்கிள்களும் போகின்றன- மண்ணெண்ணெய் புகை வந்து மூக்கில் படுகிறது- ஒன்றில் ஆறுபேர்- குஞ்சு குழந்தைகளுடன் சேர்த்து இதுகளைக் கண்டாலும் ஹெலிக்காரன் அடிப்பானா?

பெரிய பாதையால் போகிற வாகனங்களைக் கலைத்து ஹெலிகள் வேட்டுக்களைப் பொழிவது வடிவாகக் கேட்கிறது. இது கொஞ்சம் அடக்கமான பாதை என்றாலும் ஒதுக்கு என்றும் சொல்லிவிட முடியாது....

அனேகமான சாமான்களை விசாரித்தாவது பார்க்கக் கூடியதாக எட்டுப் பத்துக் கடைகள் இந்த இடத்தில் தொங்கலில் பொன்னையரின் கடை அயலில் ஐந்தாறு பெருமரங்கள் தெருவோடு அந்த மறைவு ஹெலிக்காரன் கண்ணிலிருந்து காப்பாற்றும் என்றொரு நம்பிக்கை......

ஒரு சைக்கிளில் ஒரு இளைஞனும் ஒரு சிறுவனும் வேகமாகப் போகிறார்கள்- பின்னால் ஒரு பெரிய பெட்டி கட்டுச்சரியில்லாததால் வழுகி ஒரு பக்கம் இழுவுண்டு கிடந்தது விழுமோ?......கூப்பிட்டுச் சொல்லலாமோ? சைக்கிள் கடையைத் தாண்டி விரைவாகப் போய்விட்டது-

சற்றுத்தள்ளி வட்டமிட்டுக் கொண்டிருந்த ஹெலி இப்போ கிட்ட வருவதாகப்படுகிறது-

திடீரென மோகன் எங்கிருந்தோ அவசரமாய்ச் சைக்கிளில் வந்து கடைப்படியில் கால் தேய ஊன்றி நிறுத்தினான்-

''இங்க தான் வாறான்'' என்றபடி அவதியுடன் சைக்கிளைத் தூக்கி விறாந்தையில் விட்டான்-

தெருவில் போனவர்களும் சடபடவென்று பயந்து ஒதுங்கி ஹெலி கிட்டப் பதிவது கேட்கிறது-

பொன்னையர் லாச்சியைப் பூட்டித் திறப்பை எடுத்தார்- முக்காலியை பின்னால் தள்ளினார். மேசையடியில் புகுந்து கொண்டால் சுட்டாலும் பயமில்லை ''மேலை வடிவாக ஏறிநில்... சைக்கிளையுந் தள்ளி விடு...''

தெருவில் இரண்டு பேர் அவசர அவசரமாக ஓடி மறைவது தெரிகிறது எங்கே போகிறார்கள்? ஹெலி இப்போது வலு கிட்ட.

கண்ணாடி போட்டிருக்கிற ஒரு தடியன் சைக்கிளைத் தெருவின் எதிர்ப்பக்க மதிலோடு சாத்தியதும் சாத்தாததுமாகப் போட்டுவிட்டுக்குதித்து சில்லுக்கட்டி விட்டிருந்த சேனாதியின் வண்டிலுக்கும், மதிலுக்குமிடையில் அவசரமாய் குந்தி பதுங்குவது தெரிகிறது. இந்த நேரத்தில் காற்சட்டை சேட்டுஊத்தையாவதைப் பார்க்க முடியாது தான்...

சேனாதி காலையில் வந்த கையோடு மாடுகளை இந்தக் கடை வரிசைகளுக்குப் பின்னால் தள்ளியிருக்கிற வெறும் வளவுகளுக்குள் மேய விட்டு விட்டு வாடிக்கை ஏதும்வரும் வரையில் தேவுவின் தேத்தண்ணிக் கடை வாங்கிலிருப்பது வழமை-

ஹெலி விலகிப் போவது மாதிரி ஆனால் இப்போது அதென்னகூட? இன்னொன்று?

திடீரென ஒரு காக்கிநிற வாகனம் விரைந்து வந்து சடாரென பிறேக் பிடித்து வண்டிலின் முன்னால் வெட்டியொதுங்கி நின்றது.

பெடியள்!

பொன்னையருக்கு ...

எட எப்பன் முன்னை பின்னையாவது நிப்பாட்டியிருக்கலாம்.

ஹெலி போகிறதா வருகிறதா சத்தத்தை வைத்துக் கொண்டு சொல்ல முடியவில்லை. முக்காலியை இன்னும் தள்ளிவிட்டு மேசைக்கடியில் குந்தினார். முன்னால் நின்ற மோகன் பாண் அலுமாரிக்கும் சுவர் நாக்குக்கு மிடையில் பதுங்கியபடி கூரையைப் பார்ப்பது தெரிகிறது... ஓட்டுக் கூரை-

சத்தம் விலகிப் போகிறது பொன்னையர் தலையை இடித்துக் கொள்ளாமல் எழுந்தார்.

அந்த வாகனத்தை ஓட்டி வந்த பெடியன் இறங்கிஅதன் முன் கதவைப் பிடித்துக் கொண்டு நிற்கிறான். அருகிலிருந்தவன் இறங்காதிருப்பது தெரிகிறது.

''தம்பி இதிலை கொண்டந்து நிப்பாட்டினா? '

பொன்னையர் இங்கிருந்து கேட்கிறார் குரலில் ஒலித்தது கோபமா முறைப்பாடா?

'':கோவியாதையுங்கோ ஐயா... அவசரம்... இந்தா எடுக்கிறம்...''

ஹெலி தள்ளிப்போவது மரங்களுக்கிடையில் தெரிகிறது அவன் மீண்டும் ஏறுகிறான்.

இயந்திரம் இயங்கமறுக்கிறது? இதென்ன சங்கடம்? ஹெலிக்காரன் திரும்பி வந்தால்?

வண்டியின் கீழ்ப் பதுங்கி இருந்த கண்ணாடிக்காரன் எழுந்துவந்து கைகளைத் தட்டித் துடைத்தவாறே சைக்கிளிடம் போவது தெரிகிறது அதைவடிவாக எடுத்துவிட்டு முன்னால்வந்து அவன் கேட்கிறான்;

''தள்ள வேணுமா தம்பி?''

''ஓமண்ணை தயவு செய்து... ஒருக்கா''

அந்தாள் வந்து வானைத் தொடவும் முன்னாலிருந்த மற்றப் பெடியனும் இறங்கி ஓ'டி வருகிறான் அவனது வலது கை மடித்துக் கட்டியிருக்கிறது.கட்டுத்துணிஇரத்தத்தில் ஊறிக்கிடக்கிறது இடது கையால் தள்ளுகிறான். வாகனம் மெல்ல நகர்கிறது.

ஹெலி திரும்ப வருவதற்குள் இது போகட்டும்...

''வா தள்ளி விடுவம்...'' பொன்னையர் மோகனைக் கூப்பிடுகிறார்.

கண்ணாடி ஆளுக்கும் ஒற்றைக் கையால் தள்ளும் பெடியனுக்கும் நடுவில் நின்று தள்ளும் போது பின் கண்ணாடிக்கூடாக வாகனத்தினுள் என்ன இருக்கிறதென்று தெரிகிறது.

இன்னும் மூன்று பேர்!காயக்காரர் கடுங்காயம் இரண்டு பேருக்கு அறிவில்லைப் போல பாவம் வலுஇளம் பெடியள்...

அதில் ஒருவன், அந்த ஸிற்றில் கிடப்பவன் ..?

''இல்லை அதுஜெகனில்லை அவன் சுவிஸில், இதுயாரோ வேறு யாரோ, அவனைப் போல அதே மாதிரி அதே வயது ''

காலடியில் மண்புழுதியும் மஞ்சள் வாகைப் பூக்களும் மிதிபடுகின்றன.

இயந்திரம் இயங்கத் தொடங்கி விடுகின்றது பெடியன் ஏறிப்போய் ஏறிக்கொள்ள செலுத்துபவன் பின்னால் திரும்பி

''நன்றி அண்ணை வாறம் ஐயா ''என்று கைகாட்டுகின்றான் கண்ணாடி ஆளும் கைகாட்டுகின்றான் வாகனம் நகர்ந்து விரைகிறது.

பொன்னையர், மோகன் பின் தொடரக்கடைக்குள் ஏறினார்

''அண்ணை அந்தப் பெடியனிலை ஒருதனைப் பாத்தியளே, சரியா உங்கட சின்னவன்மாதிரி..''

முக்காலியை இழுத்துக்குந்தப்போனபோது ஹெலி மீண்டும் நெருங்குவது கேட்கிறது

''அண்ணை வாறான்....கண்டிட்டான்களோ... ''

தெருவில் இப்போது கண்ணாடிக்காரனும் இல்லை.

'இனி இந்தப் பெடியள் எங்கை போய் நிப்பாட்டுவாங்கள்உங்காலைமரங்களுமில்லை மறைவுமில்லை... பொன்னையர்கேட்கிறார்'

'றிவேசிலை திரும்பி வரேலாதே?!

ஹெலி கிட்டுகிறது.

அடுத்த சந்தியில் காதுசெவிடு'பட வெடியோசை அதிர்கிறது தொடர்ந்து சூடுகள் கடவுளே

'கிர்னேட் அடிக்கிறான் அண்ணை...'

''கண்டிட்டானோ? போன பக்கந்தானே கேட்குது?''

தன் கருமம் முடிந்த பாங்கில் ஹெலி...

''ஒருக்கா இருந்து கொள்... என்னெண்டு பாத்திட்டு இந்தாவந்திட்டன்'' என்றார் பொன்னையர்மோகனின்சைக்கிளைத்தெருவில் இறக்கியபடி

நன்றி

முத்தமிழ்விழா மலர்

## வகைமிகும் தொழில் செய்வீர்:

- அரியாலையூர் வே. ஐயாத்துரை

வடிவுறு மலர்த் தோட்டங்கள்
வைத்திடும் பயனில் மேலாய்,
விடிவுற உணவுத் தோட்டம்
விளங்குதல் நன்றே பாரில்,
குடியுறு இடத்தின் வெற்றுக்
கொல்லைகள் யாவும் குப்பைச்
செடிகளைச் செதுக்கித் தள்ளிச்
சீர்தரும் பயிர்கள் செய்வீர்

அந்நிய உணவுக் கப்பல்
அண்மையில் வராது போனால்
என்னதான் செய்வோமென்றே
இடர் மிக அடைகின்றீரே!
முன்னையே பொருள்களெல்லாம்
மூட்டையாய் கொடுத்த நாட்டின்
மன்னிய மிடியைப் போக்க
வகைமிகு தொழிலே செய்வீர்

- நன்றி அருவி

## "நம்பிக்கைக்குரிய பயணம்"

**1991** ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டுத் திரைப்படங்களுக்கான 'ஒஸ்கார்' சிறப்புப் பரிசு குர்திஷ் போராட்டத்தை மையமாக் கொண்ட 'நம்பிக்கைக்குரிய பயணம்' (Journey of Hope) என்ற திரைப்படத்திற்கு கிடைத்துள்ளது.

தமது ஹொலிவூட் திரைப்படங்களாயின் 'பிரமாண்டமான' தயாரிப்புக்களுக்கே பரிசு கொடுக்கும் மேற்படி கழகம் வெளிநாட்டு படங்களுக்கு சரியானமுறையில் பரிசு கொடுப்பது வழக்கம்.

குர்திஷ்தானில் (ஈராக்கில்) உள்ள 35 வயதான ஹதரும் அவரது மகன் மொகமட் அலி (வயது 7) யும் எப்படி துருக்கியூடாகச் சுவிஸ் நாட்டுக்குச் செல்ல முனைகின்றனர் என்பது ஏறத்தாழ ஓர் 'பொருளாதார அகதிகளின்' நிலை போன்றதே. தமது உடைமைகளைக் கயவர்களிடம் மலிவு விலையில் விற்றுவிட்டு அவர்களின் கருணையற்ற தயவில் 'அல்ப்ஸ் பனி வழி'யில் தனிமையில் விடப்பட்டதைத் திரைப்படம் கூறுகிறது.

பயங்கரப் படங்கள் போல் ஓர் உண்மைக் கதையின் அடிப்படையில் அமைந்துள்ள இப் படம் மூடப்பட்ட எல்லைகளில் - இரக்கமற்ற அதிகாரிகளிடையே - அவர்கள் அகப்பட்டுக் கஷ்டப்படுவதை எளிய முறையில் எடுத்துக் காட்டுகிறது. படத்தின் இயக்குனர் ஜேர்மனியரான சேவியர் கோஸ்லர் ஆவார்.

இப் படத்தில் துருக்கிய, இத்தாலிய, சுவிஸ் ஜேர்மன் மொழிகள் பேசப்படுகின்றன. இருந்த போதிலும், மொழி கதையின் போக்குக்கு எந்த வித இடரையும் தரவில்லை.

படம் எடுக்கப்பட்டுள்ள முறை உண்மையில் நியதிகளை எமக்கு சரியான முறையில் விளக்குவதால் அகதிப் பிரச்சினையின் முழுப் பரிணாமத்தையும் பார்வையாளன் விளங்குவதுடன் விசனமுறவும் செய்யப்படுகின்றான்.

குர்திஷ் மக்கள் கொடுமையான அடக்குமுறைக்கு ஆளாகியதால் மட்டுமல்ல, நிதானபுத்தியற்ற இந்தத் தேடலில் ஈடுபட்டு கடைசியில் ஓர் விபத்திலும் மாட்டிக் கொண்டு விடுகின்றனர். வெளிநாட்டில் இருந்து வரும் ஓர் அழகிய அஞ்சல்அட்டையால் கவரப்பட்டு மூன்று அங்கத்தினர் கொண்ட இந்தக் குடும்பம்திருடர்களிடமும் கயவர்களிடமும் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாகி விடுகிறது. இப்படம் ஓர் 'ட்ரகுலா' (DRAGULA) படம் போன்று அடுத்து வரும் - தொடர்புடைய-பயங்கரக் காட்சிகளைக் கொண்டதாகும்.

சொர்க்கத்தின் எல்லைப் புறத்தில், ஓர் குடும்பத்துக்கு நடந்த சோக நிகழ்வு இது,

ஆதாரம் :- நியூஸ்வீக்
தமிழில் : சு. மகேந்திரன்

# மக்கள் இடம் பெயர்கிறார்கள்

நிலாந்தன்

ஒரு கத்தோலிக்கரான மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வா வடபகுதிக்கான இடைக்காலத்தளபதியாக நியமிககப்பட்டதின் பின், மேற்கொள்ளப்பட்ட முதலாவது இராணுவ நடவடிக்கையின் போதே தொகையான கத்தோலிக்கர்கள் தமது வதிவிடங்களை விட்டு ஓடும்படியாயிற்று. இளவாலை, மாரீசன் கூடல், மாதகல் போன்ற கத்தோலிக்கர்கள் செறிந்து வாழும் கிராமங்களில், இப்பொழுது ஆலயமணிகள் ஒலிப்பதில்லை. அங்கு வழிபாடுகள் நின்று போய் இரண்டு வாரங்களுக்கும் மேலாகிறது.

வலிகாமம் வடக்கைத் தாக்கிய 'நிலநடுக்கம்' வலிகாமம் தென் மேற்கிலுள்ள சில கிராமங்கள் வரை பரவியது யாழ்ப்பாணத்துக்கான வெற்றிலைச் செய்கை நிலத்தின் ஒரு பகுதியில் இப்பொழுது இராணுவம் நிலைகொண்டுள்ளது. இங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பெருமளவில் மானிப்பாய்ப் பகுதிகளில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்.

மக்கள் இடம்பெயர்வது என்பது குறிப்பாக வடக்கில் இரண்டாவது ஈழப்போரின் பிரதான அனுபவங்களில் ஒன்று. இம்முறை போர் இரு பெரும் படையணிகளுக்கிடையில் ஒரு மரபுப்போரின் அம்சங்கள் சிலதைக் கொண்டதாக நிகழ்கிறது. எனவே போர்க்களத்தின் பரப்பளவும் பெரியது. இதனால் போர் முனையிலிருந்து மக்கள் இடம்பெயர்வது தவிர்க்க முடியாததாகிறது. யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த இடம்பெயர்வுகளில் பெருயபாலானவை பலாலி விமானத்தளத்தைச் சுற்றி நிகழ்ந்தவை. இப்பொழுது பலாலித்தளம் வலிகாமம் வடக்கின் பெரும் பகுதியை விழுங்கிவிட்டது. ஒவ்வொரு தளவிஸ்தரிப்பு நடவடிக்கையின் போதும் சில கிராமங்கள் தளத்தோடு இணைக்கப்பட்டன. இவைதவிர, கடந்த வருடம் காரைநகரில் இராணுவம் வலந்தலைச் சந்திவரை நகர்ந்த போது காரைநகர் வாசிகள் வலிகாமத்தை நோக்கி நகர்ந்தார்கள். இது போலவே 'வலம்புரி' யின் போதும் தீவுப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வலிகாமத்திற்குள் வந்தார்கள். இப்பொழுது வலிகாமம் வீங்கிப்போயுள்ளது- அரச செயலகத்தின் கணிப்பீடுகளின்படி மூன்று லட்சத்திற்கும் குறையாத மக்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள்- தவிர, பிறமாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்களின் தொகை ஒன்றும் உண்டு- இடம்பெயர்ந்தவர்களில் பாதித்தொகைக்கும் குறையாத,மக்கள் அனேகமாக வலிகாமம் பகுதியில் தமது உறவினர், நண்பர்கள் வீட்டிலோ அல்லது வெளிநாடுகளிற்குச் சென்றவர்களின் வீடுகளிலோ தங்கியிருக்கிறார்கள். சிறு தொகையினர் கொழும்பை நோக்கிச் சென்று விட்டார்கள்- மிஞ்சிய தொகையினர் அகதிமுகாம்களிலும் வலிகாமத்திலும் தென்மராட்சியிலும் உருவாக்கப்படும் தற்காலிககுடியிருப்புக்களில் வசிக்கிறார்கள்-இரண்டாவதுஈழப் போரினால் பெரும்பாலும் நிவாரணத்திலேயே தங்கி வாழும் ஒரு தொகுதி மக்கள் உருவாகியிருக்கிறார்கள்.

இந்த நிவாரணத்திலும் இப்போது வெட்டு விழுந்துள்ளது. இது பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பத்திரிகையாளர் கூறும்போது, இடம்பெயர்ந்த மக்கள் தமது தொழில்வாய்ப்புக்களிலிருந்தும் பிடுங்கி எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதால்,மேற்படி தொழிற்துறைகள் மூலம் பெறப்படும் வருமானமும் இப்பொழுது அரசிற்குக்கிடைப்பதில்லை.இந்நிலையில் இனாமாக நிவாரணமும் தருவது என்பதை 'மேலதிக நட்டம்' என்றே அரசாங்கம் கருதுகிறது எனவே நிவாரணத்தைப் பாதியாக்குவது என்பதில் நிச்சயமான பொருளாதார நோக்கங்கள் இருக்கமுடியும் என்று தெரிவித்தார். மேலும் உதவி வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூன்றாம் உலக நாடுகளில் உருவாகிவரும் போரின் அகதிகளிற்கு உதவிதர மறுக்கின்றன- இந் நாடுகளில் இயற்கை அழிவுகளால் உருவாகும் அகதிகளிற்கு மட்டுமே நிவாரணம் தரமுடியும் என்பது உதவி வழங்கும் அரசசார்பற்றநிறுவனங்களில் இன்றைய நிலைப்பாடாகஉள்ளது. நிவாரண வெட்டிற்கு பொருளாதார நோக்கங்களோடு அரசியல் நோக்கங்களும் இருக்கமுடியும் என்று சந்தேகிக்க இடமுண்டு. இடம்பெயர்ந்தோர் தொகையை அரசாங்கம் ஒரு பளுவாகத்தான் கருதுகிறது-இப்பளுவை முழுவதுமாக யாழ்ப்பாணத்தின் மீதே சுமத்தி வருவதால் அரசியல் இலக்குகள் சிலதை அடைய அரசாங்கம் முயலக்கூடும்.

இராணுவத்தாற் கைப்பற்றப்பட்ட நிலப்பரப்பில் தமிழர்கள் மீளக்குடியேறாததிற்கான முக்கிய காரணங்களில் அவர்கள் தொடர்ச்சியாகப் பெறும் நிவாரணமும் ஒன்று என்று இலங்கை அரசு கருதுமாக இருந்தால் நிவாரணத்தைக் குறைப்பதின் மூலம் இடம்பெயர்ந்ததமிழர்களைத் தமது வதிவிடங்களை நோக்கி ஏங்கச்செய்யலாம் என்றுஅவர்கள் நம்பக்கூடும். மேலும் மேலும் தமிழர்களை இடம் பெயரச் செய்வதின் மூலமோ அல்லது ஏற்கனவே இடம் பெயர்ந்தவர்களை நெருக்கடிக்குள்ளாக்குவதின் மூலமோ அவர்களை இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பகுதியில் மீளக்குடியமருமாறு நிர்ப்பந்திக்க அரசாங்கம்விரும்புகிறது என்று நம்ப இடமுண்டு.

ஏனெனில் வடக்கில் (குறிப்பாகக் குடாநாட்டில்) இராணுவத்தின் பிடியிலுள்ள பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமரக் கூடிய நிலைமை இல்லை என்பதே இன்று இலங்கை அரசு வடக்கில் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. தீவுப்பகுதி அனுபவங்கள் அதைத்தான் நிரூபிக்கின்றன. வடக்கில் இராணுவம் ஏதாவது ஒரு பகுதிக்குள் முன்னேறும்போது அநேகமாகக் கைவிடப்பட்ட கிராமங்களைத்தான் துருப்புக்கள் கைப்பற்ற முடிகிறது. ஆளரவமற்ற தெருக்களில் அலைந்து திரியும் வளர்ப்புப் பிராணிகளையும், சில வீடுகளில் தனித்து விடப்பட்ட முதியோர்களையும் தவிர, மனித வாசனையற்ற கிராமங்களைக் கைப்பற்றி விட்டு அவற்றை 'விடுதலைப் பிரதேசங்களாக' பிரகடனம் செய்வதோ, அல்லது அங்கு சிவில் நிர்வாகத்தை ஸ்தாபிக்கப் போவதாகக் கூறுவதோ சலிப்பூட்டக் கூடியது என்பதை இராணுவ உயர்பீடம் புரிந்து கொண்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட நிலப்பரப்பில் மக்கள் மீளக் குடியமர்வதை இராணுவம் ஒருவிதத்தில் விரும்புகிறது. ஆனால் மக்கள் மீளக் குடியமரும் போது அங்கு புலிகள் சுலபமாக ஊடுருவி விடுவர் என்ற அச்சமும் இராணுவத்திடம் உண்டு- அவ்வாறெனில் கைப்பற்றிய நிலத்தில் மக்கள் குடியேறிய பிறகு அந்நிலப்பரப்பிற்கும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிலப் பரப்பிற்கும் இடையில் மனிதர்கள் அற்ற தடுப்பு வலையம் ஒன்றைப் பேணவேண்டியிருக்கும் ஆனால் இதற்கு வேண்டிய ஆட்பலம் இராணுவத்திடம் இல்லை என்பதை இராணுவத்திற்குச் சார்பான விமர்சகர்களே' ஒப்புக் கொள்கிறார்கள்.

புலிகள் வடக்கில் ஒரு மரபுப் போரையொத்த விதத்தில் போரை நடத்தும் வலிமையோடிருக்கும் வரை தமிழர்கள் இராணுவத்தின் பிடியிலுள்ள நிலப்பரப்பில் குடியிருப்பதற்கான வாய்ப்புக்கள் அனேகமா இல்லை என்றுகூறலாம். இப்பொழுது வடக்கில்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# பாட்டால் உலகளந்த பாரதிப் பெருங்கவிஞன்!

ஜெ. கி. ஜெயசீலன்

''வானம் பிளந்து - உயர்
கோபம் பிறந்தது!
தமிழ்
வாசல் திறந்து - எழில்
தீபம் எழுந்தது!!

என்பதுவே, பாரதியாரின் பிறப்புரிமைப் பிரகடனம்! பாரதப் பெருநாட்டின் விடுதலைப் போராட்டயுகத்தினை வீறுகொண்டெழ வைத்த, விஸ்வரூபக் கவிதா சக்தி அவன்! பிறவி மேதையெனப் பெரும்புகழ் குவித்தவன்! தாய்நாடு, தாய்மொழி, தாயகப் பண்பாடுகளின் மீது தணியாத தாகம் மிகக் கொண்டவன்! சமய நெறியின் மீது அவன் கொண்டிருந்த பற்றுக்கூட, மிக அலாதியானது; அற்புதமானது!! அன்றைய இன்றைய மத வெறியர்களின் போலியான நடிப்போ, மூடத்தனங்களோ, சுரண்டல் முயற்சிகளோ அணுவளவும் இல்லாத இறைபக்தியாளன் பாரதி! உலகளாவிய பரந்து, விரிந்த சிந்தனைகளுக்குச் சொந்தக்காரனான அவனிடம் குறுகிய மனப்பான்மையோ, இழிந்த எண்ணங்களோ கிடையாது. அதனாற்தான்,

''காக்கை, குருவி எங்கள் ஜாதி! - நீள்
கடலும், மலையும் எங்கள் கூட்டம்!
நோக்கும் இடமெல்லாம் நாமின்றி வேறில்லை!
நோக்க, நோக்கக் களியாட்டம்!!''
எனக் குதித்துக் குதித்துப் பாட முடிந்தது!

''அச்சமும், பேடிமையும், அடிமைச் சிறுமதியும் உச்சத்திலே கொண்டவர்களாய் வாழ்ந்த ஊமைச் சனங்களி'' டையே பாரதியின் சுதந்திரக் கவிச் சங்கு முழங்கியது. அறியாமை ஒரு பக்கம்; அநியாயம் ஒரு பக்கம்; அலங்கரித்து நின்ற பாரத நாட்டை அவற்றிலிருந்து மீட்டெடுத்து, முன்னேற்றிவிடப் பெரிதும் முயன்றான், மலிந்து போய்க் கிடந்த மதச் சண்டைகளையும், சாதிச் சண்டைகளையும், மொழிச் சண்டைகளையும் முற்றாக அகற்றிவிட, முழு மூச்சுடன் பாடுபட்டான்.

''தொண்டு செய்யும் அடிமை! உனக்குச்
சுதந்திர நினைவோடா?
பண்டு கண்டதுண்டோ? அதற்குப்
பாத்திர மாவாயோடா?''
''சாதிச் சண்டைபோச்சா? உங்கள்
சமயச் சண்டை போச்சா?
நீதி சொல்ல வந்தாய்! கண்முன்
நிற்கொணாது போடா!

என்கிறான், இந்தியக் குடிமக்களைப் பார்த்து! அந்நியரின் கொடுங்கோன்மை ஒருபுறம்! புத்தி கெட்ட மக்களின் புன்மைத்தனம் மறுபுறம்! விடுதலைப் போர்க் கவிஞனின் சுதந்திரக்கனவு இன்னொருபுறம்! இப்படியாக இருந்தது அன்றைய கால விசித்திரம்! பாரதியின், ஆவேசக் கவிதைகளின் அனல் வீச்சுகளுக்குத், தூண்டு சக்தியாக அமைந்ததே, அந்தத் துர்ப்பாக்கிய நிலைமைதான்!

அடக்கி ஆளவந்த அந்நிய ஆதிக்க வெறியரைப் பார்த்துப் பாடும் போது;-

''ஆயிரம் உண்டிங்கு ஜாதி! எனில்
அந்நியர் வந்து புகல் என்ன நீதி? ஒரு
தாயின் வயிற்றில் பிறந்தோர்
தம்முட் சண்டை செய்தாலும் சகோதரரன்றோ!

என்பதாகக் கவிக்குரல் எழுப்பி' உள்நாட்டு விவகாரங்களிலே தலையிட்டு, உதவிபுரிவது போல அந்நாட்டையே விழுங்கிவிட முயலும் ஆதிக்கப் பெருங்கழுகுகளுக்கு அறை கொடுக்கிறான் பாரதி! அன்றைய கவிக்கூற்று, இன்றைய காலத்திற்கும், இனிவரும் என்றைய காலத்திற்கும் பொருந்துவதாகவே அமைந்துள்ளது தனது தாய்த் திருநாட்டில் நிறைந்துள்ள இன, மத, ஜாதிக் கலவரங்களைக் காரணம் காட்டி அந்நிய சக்தியான வெள்ளையன் ஊடுருவி வந்ததை மிகவும் ஆக்ரோஷத்தோடு எதிர்த்துக் கவிதை பாடினான். கூடவே, தன் தாயகத்தாரையும் பிடரியில் பிடித்துக் குலுக்கி எடுத்தான் ஏன்? அவர்களுக்குள் ஏறியிருந்த அனைத்து விதமான வீண் வெறியுந் தீரவேண்டும் என்பதற்காகவே! அப்போதுதானே தாயக விடுதலையை நோக்கி அவர்களை வழி நடத்திச் செல்ல முடியும், பாரத தேசத்தின் பழம் பெரும் கீர்த்தியையும்' புகழையும் பாடிப், பாடிப், பெருமிதமுற்ற பாரதி; தனது கால அசிங்கம் பிடித்த அவல நிலையைப் பாடிப், பாடிப் ஆத்திரமும், வேதனையும் அடைந்தான். அவனது பாட்டுச் சூடு. வெள்ளையரின் மீது வேட்டுச் சூடாகவே விழுந்தது!

''கூட்டத்திற் கூடிநின்று, கூவிப்பிதற்றிவிட்டு, அதை நாட்டத்தி

**மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின்**
**71-வது நினைவுதினம் இன்றாகும்**

லேயே கொள்ளாமல், ஒரு நாளிலேயே மறப்பவன்'' அல்லன் பாரதி! ஏனெனில், அவன் சாதாரண மனிதன் இல்லையே. பிறவிக் கவிதாமேதை எனவே தான்,

''தேடிச் சோறு நிதந் தின்று; - பல
பல சின்னஞ் சிறு கதைகள் பேசி; - மனம்
வாடித் துன்பம் மிக உழன்று; பிறர்
வாடப் பல செயல்கள் புரிந்து- நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி;-கொடுங்
கூற்றுககு இரையெனப்பின் மாயும்;-இந்த
வேடிக்கை மனிதரைப் போலவே; -நான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?!''

என்பதாக இறைவனை நோக்கி ஏளனத்துடன் எள்ளி நகையாடிப் பாட முடிந்தது அவனால்! வேறுபாடு பல கொண்டு, வேதனைப்பட்டு நிற்கும் உலக மக்களை உய்விக்க வந்த உயர் தனிக் கவிஞனாகத் தன்னை அவன் அடையாளங் காட்டினான் பஞ்சைப் பராரிகளின் பட்டினி அவலத்தைக் கண்டு:-

''இனியொரு விதி செய்வோம்! -அதை
எந்த நாளுங் காப்போம்
தனியொரு வனுக்கு உணவில்லையெனில்

ஜெகத்தினை அழித்திடுவோம்!!' என, நெஞ்சு பொறுக்காமல், நெருப்பெடுத்துப் பாடிய பாரதி ''நமக்குத் தொழில் கவிதை! நாட்டுக்கு உழைத்தல்! இமைப்பொழுதும் சோராதிருத்தல்!' என்று தனதுதலையாய பெரும் இலட்சியங்களை உலகத்திற் குணர்த்தினான்!

# ஐதரசன் குண்டினால் 13ச. மைல் தீவு சுவடு தெரியாமல் அழிக்கப்பட்டது

1942 ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் திகதி சிகாகோ நகரத்தில் ஓர் இரகசிய ஆராய்ச்சி நிலையம் அதன் நடுவிலுள்ள ஓர் அறைக்குக் கீழ் உள்ளநில அறை கருங்கற்கள், தேக்கு பரங்களால் அரண் செய்யப்பட்டிருந்தது. விஞ்ஞானிகள் கூட்டமொன்று அவ் விடத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தது. கட்டுப்பாட்டறையின் அளவிடும் கருவிகளுக்கு முன்னால் என்ரிக்கோ பேமி, ஆதர் காம்டன் ஆகியவ் விஞ்ஞானிகளுடன் பலர் பரபரப்புடன் காத்து நின்றனர் அவர்கள் அளவு காட்டும் கருவிகளை உற்றுப்பார்த்தவாறு இருந்தனர் எல்லாக் கருவிகளும் ''கிளிக்'' என்ற வலிமை வாய்ந்த ஒலியை எழுப்பின. கட்டுப்பாட்டு விசையை ஒரு விஞ்ஞானி இறுகப்பிடித்தவாறு கட்டளைக்கு காத்திருந்தார். எல்லோர் மனதிலும் பயம் குடி கொண்டிருந்தது.

டாக்கர் பேமி கட்டுப்பாட்டு விசையை ஆறு அங்குல தூரம் நகர்த்துமாறு கட்டளையிட்டார். உடனே இடியைப் போன்றதோர் ஒலி பரவி மறைந்தது. மேலும் ஒரு அடி தூரம் கட்டுப்பாட்டு விசை நகர்த்தப்பட்டது பேரிடி போன்ற ஒலிதோன்றி, அதன் வலிமை அதிகரித்துக் கொண்டே சென்றது. உடனடியாக கட்டுப்பாட்டு விசை பழைய நிலைக்கு கொண்டு வரப்பட்டது

அன்று மாலை டாக்டர் காம்டனும் ஹாவாட் பல்கலைக்கழக டாக்டர் ஜேம்ஸ் பி. கோனன்டும் தொலைபேசி மூலம் உரையாடினர் டாக்டர் காம்டன் இத்தாலிய நாட்டு மாலுமி அமெரிக்காவில் நலமாக வந்து இறங்கினார்'' என்று தெரிவித்தார். கோனன்ட் ' சுதேச மக்கள் எப்படியிருந்தனர்? ' என்று கேட்டார். ''மிகவும் நட்புறவுடன் பழகினர்'' என்று காம்டன் பதிலளித்தார்.

அணுவைப் பிளந்து அதன் மூலம் சக்தியைப் பெற்றது மட்டுமன்றி அதனைக் கட்டுப்படுத்தவும் முடிந்தது என்பதையே அவர்கள் இருவரும் இந்த உரையாடல் மூலம் பரிமாறிக்கொண்டனர். அன்று அணுசக்திப் பரிசோதனையில் முதலாவது வெற்றித் தினமாகும் அணு என்பது பிரிக்க முடியாத ஒரு அடிப்படைத் துணிக்கை என ஆரம்பகாலத்தில் கருதப்பட்டது. ஆனால் பின்னைய ஆராய்ச்சிகள் மூலம் நிறையுடைய இயக்கமற்ற புரோத்தன், நியூத்திரன் என்பவற்றை கருவாகவும் அதனைச் சுற்றி குறித்த பாதையில் இயங்கும் நிறையற்ற இலத்திரன்களையும் முக்கிய உறுப்புகளாகக்கொண்ட ஒரு அமைப்பு என கண்டுபிடிக்கப்பட்டது அணுப்பிளவு என்பது உண்மையில் அணுக்கருவை பிளப்பதாகும். கருவிலுள்ள நியூத்திரன்களையும் புரோத்தன்களையும் பிணைததிக்கும் சக்தி அணுக்கரு பிளப்பின் போது வெளிவருகிறது.

சாதாரணமாக இரசாயன முறையில் ஏற்படும் தாக்கங்களின் போது வெப்பம் வெளிவிடப்படல் அல்லது உறிஞ்சப்படல் இடம்பெறும் ஆனால் இரசாயன மாற்றங்களின் போது அணுக்கருவில் எதுவித மாற்றமும் ஏறபடுவதில்லை ஆனால் அணுக்கருப்பிளப்பின் போது கருவிலேயே மாற்றம் நிசழ்கிறது.

எல்லா அணுக்களின் கருக்களிலும் சக்திதேக்கி வைககப்பட்டுள்ளன. ஆனால் சில அணுக்கள் அணுத்துகள்களைக் கொண்டு தாக்கினாலேயே சக்தியை வெளிவிடுவனவாக உள்ளன ரேடியம், யுரேனியம் போன்றவை இடைவிடாது தாமாகவே சக்தியை வெளியிடுகின்றவையாக காணப்படுகின்றன. இவ் இரு மூலகங்களுமே அணுசக்தியைப் பெறுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

1896 ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானியான ஹென்றி பெக்குரல் தனது ஆய்வு கூடத்தில் வைத்திருந்த யுரேனிய தாதுப்பொருள் இருளில் ஒளி வீசுவதை அவதானித்தார். அத்துடன் அதற்கு அருகில் கறுப்பு நிற தாளினால் நன்கு சுற்றப்பட்டு வைக்கப்பட்டிருந்த புகைப்படத்தாளை இக் கதிர் வீச்சு தாக்கியிருந்ததை அவதானித்தார் அதாவது இக்கதிர் வீச்சு ஊடுருவும் தன்மை உடையது என அவர் உணர்ந்தார்.

பின்னர் பீரி கியூரி என்னும் விஞ்ஞானியும் அவரது மனைவி மேரிக் கியூரியும் செய்த ஆராய்ச்சிகளின்விளைவாக 1910 ஆம் ஆண்டில் யூரேனியத்திலும் சிறந்த ரேடியம் எனும் மூலகம் கண்டு பிடிக்கப்பட்டது ரேடியம் அணுக்கள் வெளியிடும் கதிர்கள் தசை உலோகங்கள் என்பவற்றையும் துளைத்துச் செல்வனவாக காணப்பட்டன.

யூரேனியம் அணுக்களை அணுத்துகள்கள் கொண்டு தாககிய போது அணுப்பிளவு ஏற்பட்டு சக்தி வெளியேறுவதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர். அணுக்கருவை பிளபபதற்கு அதிவேகத்தில் செல்லும் நியூத்திரன்களை ஆரம்பத்தில் விஞ்ஞானிகள் பாவித்தனர். ஆனால இது தொடரான அணுப்பிளப்பாகவோ அல்லது தொடர்ச்சியான சக்தி வெளியிடும் செயல் முறையாகவோ அமையவில்லை.

ஆனால் இவ்வாறு பாயும் நியூத்திரன்களின் வேகம் குறைக்கப்பட்டால் அவற்றை அணுக்கருக்கள் பற்றிக்கொள்வதுடன் தொடர்ச்சியான அணுப்பிளவையும் அதன் மூலம் தொடர்ச்சியாக அணு சக்தியையும் பெறமுடியும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். இத்காலிய நாட்டு விஞ்ஞானியாகிய என்ரிகோ பெர்மி என்பவர் வேகமாகச் செல்லும் நியூத்திரன்களை கரியினூடு செலுத்தி அவற்றின் வேகத்தை குறைத்தபின் அணுக்கருவைத் தாக்கவிடலாம் எனகண்டு பிடித்தார் யூரேனியம் அணுவை வேகம் குறைக்கப்பட்ட நியூத்திரன்களைக் கொண்டுதாக்குவதன் மூலம் அவை அணுவைப் பிளந்ததோடு பல நியூத்திரன்களை அணுக்கருவிலிருந்து வெளியேறுமாறும் செய்தன இதன் மூலம் தொடர்ச்சியான அணுப்பிளப்பு ஏற்படுத்தப்பட்டது.

ஒருகிராம் யூரேனியத்தை இவ்வாறு பிளபபதன் மூலம் அதிலிருந்து இருபதாயிரம் கிலோ ரி என்ரியை வெடிக்க வைக்கும் போது பெறபடும் சக்தியைப் பெறலாம் என அறியவருகிறது எனினும் யூரேனியததை அதன் மூலப்பொருளில இருந்து பிரித்தெடுப்பது இலகுவான செயலல்ல.

இதேவேளை அணுக்களைப் பிளப்பதால் கிடைக்கும் சக்தியிலும் அவற்றை இணைப்பதால் அதிக சக்தி கிடைக்கும் என பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது சூரியனில் இரண்டு ஐதரசன் அணுக்களின் கருக்கள் இணைககப்பட்டு கீலியம் எனும மூலகம் உருவாக்கப்படுவதன் மூலமே பெருமளவு வெப்பசக்தி உருவாக்கப்படுகிறது.

இச் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே ஐதரசன் குண்டுகள் தயாரிக்கபபடுகின்றன இங்குஐதரசன்களின் சமதானிகளின் கலவை ஓர் அணுகுண்டினுள் வைக்கப் படுகிறது அணுகுண்டு வெடிக்கும் போது உருவாகும் 20,00,000 பாகை பரவனட்டு வெப்பநிலை இரு ஐதரசன் அணுக்கருக்களை ஒன்றிணைதது ஹீலியமாக மாற்றுகிறது இவ் இணைப்பினால் உருவாக்கப்படும் வெப்பத்தின் அளவு மிகப் பெரிதாக இருக்கும்.

முதன் முதலில் வெடிக்கப்பட்ட ஐதரசன் குண்டின் சக்தி அணு குண்டின் சதியைப் போல் 250 மடங்கானதாகும். இக்குண்டினால் 13 சதுரமைல் பரப்புடைய தீவு சுவடு தெரியாமல் அழிந்து போனது இவ்வாறு அணுக்குண்டு வெடிப்பின் மூலம் உருவாகும் அணுச் சேர்க்கையால் பெறப்படும் சக்தியைக் கட்டுப்படுத்துதல் மிகவும் கடினம்

அணுப்பிரிவின் போது வெப்பம் மட்டுமே வெளிவருகிறது இவ் வெப்பத்தை உபயோகித்து வழமையானமுறைகளிலே மின்சக்தியைப் பெறலாம் ஆனால் அணுச் சேர்க்கையின் போது வெப்பத்துடன் கூடவே மின் சக்தியும் கிடைப்பது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அணு சத்தியை கட்டுப்படுத்தி வேலை வாங்குவது சுலபமான காரியமல்ல எனினும் மேலை நாடுகள் இத் தொழில் நுட்பத்தில் பெருமளவு முன்னேற்றத்தைக் கண்டுள்ளன இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகள் இது குறித்து பல ஆராய்ச்சிகளைமேற்கொண்டு வருகின்றன.

அணுசக்தி நீர்மூழ்கி போன்றவற்றில் அணு ஆற்றலை கட்டுப்படுத்தக்கூடிய சாதனங்கள் காணப்படுவது பெரும் முன்னேற்றமே. ஆனால் விஞ்ஞானிகள் இத்துடன் திருப்தி அடைவதாக இல்லை அன்றாட போக்குவரத்துச் சாதனங்கள் வீட்டுப் பாவனைப் பொருட்கள் என்பவற்றினைக்கூட அணுசக்தி மூலம் இயக்க முடியுமா என அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

**வேலவன்**

---

# ''இந்தியசமுதாயம்ஆட்டுக்குட்டியைப்போல் ராஜீவை பலியிடும்என நான் நம்பினேன்''

## 'ராஜீவ்' என்ற நூலில் சோனியா

'ராஜீவ் ஒரு ஆட்டுக்குட்டியைப்போல் தன்னை பலியிட்டுக் கொண்ட சமுதாய முறை மீது எனக்கு கோபம் ஏற்பட்டது அது அவரை நிச்சயமாக அழித்து விடும் என்று நான் கருதினேன்'

இவ்வாறு ''ராஜீவ்'' என்ற தலைப்பில் வெளியான நூலில் ராஜீவ்காந்தியின் மனைவி திருமதி சோனியா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

அந்நூலில் மூன்று மரணங்கள் தனது வாழ்வையும் திருமணத்தையும் மாற்றியுள்ளதாக கூறியுள்ளார்.

ராஜீவ் காந்தியின் அரசியல் பிரவேசத்தை எதிர்த்தது குறித்தும் பிரதம மந்திரி பதவியை ஏற்க வேண்டாமென தான் அவரிடம் மன்றாடியது குறித்தும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

விமான விபத்தில் சஞ்சேயின் மரணம் எங்கள் அனைவரின் வாழ்க்கையையும் மாற்றி விட்டது. மிகத் தைரியமும், திடசித்தமும் கொண்ட மாமி இந்திராவின் மனம் கூட இந்த மரணத்தினால் உடைந்து விட்டது. உலகத்தில் ஒரேயொரு நபரின் உதவியையே நம்பி இருந்தார் அவருக்காகவும், எங்களுக்காகவும், எங்கள் பிள்ளைகளுக்காகவும், எங்கள் ஒன்றுபட்ட வாழ்க்கைக்காகவும் விமானியாக இருப்பதில் ராஜீவிற்கிருந்த ஆவலுக்காகவும், எங்கள் சுதந்திரத்துக்காகவும்நான் ஒரு புலியைப்போல் போராடினேன்.

ராஜீவ் தனது அன்னைக்கு உதவ விரும்பியதால் நானும் அதற்கு அடிபணிந்து அதன் விளைவுகளுடன் என்னையும் இழுத்துச் செல்ல அனுமதித்தேன்.

பிரதமர் பதவியை ஏற்குமாறு அவர் கோரப்பட்டபோது மற்றவர்கள் சூழ்ந்திருக்கும் நிலையிலும் ''வேண்டாம்'' என்று கெஞ்சினேன். ராஜீவ் என் கைகளைப் பிடித்தவாறு ''எந்த நிலையிலும் நான் கொல்லப்படுவேன்'' என அப்போ கூறியிருந்தார். அவரது பாதுகாப்பு குறித்து இடைவிடாமல் கவலை அடைந்தேன்.

1991 ஏப்ரல்தேர்தலில் தினமும் சராசரி 20 முதல் 22மணி நேரம் வேலை செய்தார் அவருக்கு உடம்பில் வலியும் சிராய்ப்பும் இருந்தது இதைக் கண்டு என்இருதயம் உடைந்து விட்டதுவலிஇருக்கிறதுபரவாயில்லை என அவர் கூறினார்.

மே 20 இல் தேர்தல் பிரச்சாரத்துக்காக பரஸ்பரம் அன்புடன் விடைபெற்றுக் கொண்ட பின் வெளியே சென்றார் திரைச் சீலைக்கு பின்னால் இருந்தவாறே அவர் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தேன் இதுதான் நான் அவரைகடைசியாக உயிருடன் கண்ட நாள்.

எனராஜீவ்எனும்நூலில்எழுதியுள்ள சோனியா கணவன் கொலைசெய்யப்பட்டு 15மாதங்களின்பின்னால் இந் நூலை எழுதியுள்ள சோனியா இந் நூலில் ராஜீவின் கடிதங்கள் புகைப்படங்கள் முதலியனவற்றையும் சேர்த்துள்ளார். இந்நூலின்விலை 2,200 ரூபாவாக விற்பனைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

---

# ஆங்கில குற்றவாளிகளின் ...

முயற்சிகளுக்குப் பிறகு 1984 இல் புனித நிலங்களைப் பாதுகாக்கும் சட்டம் உருவாக்கப்பட்டது.

ஒருகாலத்தில் தேசமெங்கும் சொந்தமாக இருந்த பழங்குடியினருக்கென இப்போது தனிக் குடியிருப்புப் பிரதேசங்கள் ஒதுக்கப்பட்டன அவர்களுக்கு நிலத்தில் உரிமை கொடுக்கும் சட்டங்களை இயற்ற விடாமல் சுரங்கக் கம்பனிகளும் வெள்ளைப் பொது மக்களும்சேர்ந்து தடைசெய்து விட்டனர்

பழங்குடியினர் என்றாலோ ஏதோ தீண்டத் தகாதவர்கள் அபாயகரமானவர்கள், பரிசோதனைகளுக்கான எலிகள் என்றாகிப் போயிற்று- பல வகையிலும் துன்புறுத்தப்பட்டுவரும் இவர்கள் 70 களின் இறுதியிலிருந்து தங்கள்உரிமைகளுக்காக சற்று உரக்கவே குரல் கொடுக்க ஆரம்பித்தனர்-

இந்த வேளையில் அரசாங்கமும் இவர்களைக் மிகவும் கடுமையாகஒடுக்க ஆரம்பித்தது. பொலிஸ் காவலில் வைக்கப்பட்டனர் இதனைத் தொடர்ந்து பொலிஸ் காவலில் இருப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தது. அதிகரித்து வருகிறது.

பொலிஸ் நடவடிக்கைகளை விசாரிக்கவும். பிரித்தானியா நடத்திய அணுகுண்டுப் பரிசோதனைகளில் கதிர்வீச்சினால் பாதிக்கப்பட்ட பழங்குடியினர் குறித்து விசாரிக்கவும் விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் நிவாரணம் இல்லை.

இவ்வளவு ஒடுக்குமுறைகள் இருபபினும் பழங்குடியினர் அவுஸ்திரேலியாவின் காலாசார துறையில் நிறைய பங்களிப்புகளைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக கெவின் கிஸ்பர்ட், ரிட்டோ வாக்கர் போன்ற எழுத்தாளர்களும்; ஆல்பர்ட் நமாட ஜிரா கிளிப் போர்ட் போன்ற ஓவியர்களும் விளையாட்டுத் துறையில் இவோன் கூலகோஸ் (டென்னிஸ்), லையனால் ரோஸ் (குத்துச்சண்டை), இலா சகோதரர்கள் (கால்பந்து) போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஒரு காலத்தில் மிக அதிகமாக இருந்த பழங்குடியினரின் எண்ணிக்கை தற்போது வெகுவாகக் குறைந்து மொத்தச் சனத்தொகையில் 1:1சத விகிதமாகி விட்டது. சரியான முயறசிகள் எடுக்கப்படாமல் போனால் கலாசார பாரம்பரியம மிக்க ஓர் இனமே அழிந்து விடும் அபாயத்திலுள்ளது.

நன்றி:

— ஜூனியர் போஸ்ட்

# “எல்லா உயிர்களுக்கும் வாழ்வுரிமை உண்டு தமிழ் மக்களுக்கு மட்டும் அது இல்லை”

## வாழ்வுரிமை மாநாடு குறித்து ராமதாஸ்

“இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு எந்த வித கொள்கையையும் கடைப்பிடிக்காத நிலையில் இந்திய மண்ணில் பயங்கரவாதத்தில் ஈடுபட்டார்கள் என்று நிரூபிக்கப்படாத நிலையில் விடுதலைப் புலி இயக்கத்தின் மீது இந்திய அரசு தடை விதித்துள்ளது

இதை எதிர்த்து நடுவர் மன்றத்தில் பாட்டாளி மக்கள் கட்சி வழக்குத் தொடர்ந்துள்ளது இந்திய அரசியல் சட்டப்படி ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கப்பட்டுள்ள அடிப்படை பேச்சுரிமையை இந்த தடை பாதிக்கிறதென்பது எங்கள் வழக்காகும்”

இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாசும் பண்ருட்டி எஸ். ராமச்சந்திரனும் சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில தெரிவித்தனர். பாட்டாளி மக்கள் கட்சியின் பேரணி மற்றும் மாநாடு தொடர்பாக கடந்த 4ஆம் திகதி சென்னையில் பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது அதிலேயே இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் நிருபர்களிடம் கூறியதாவது.

10,11,12, ஆம் திகதிகளில் “தமிழர் வாழ்வுரிமை மாநாடு” சென்னையில் நடக்கிறது 12 ஆம் திகதி மெரீனா கடற்கரையில் உள்ள சீரணி அரங்கில் பொது மாநாடு நடக்கிறது தமிழ் நாட்டிலும் அகில இந்தியாவிலும் புறக்கணிக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக வாதாடும் அரசியல் தலைவர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள்.

முன்னாள் பிரதமர் வி. பி. சிங் மாநாட்டு மலரை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுகிறார்

முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங், எஸ். எஸ் மான் ராம் விலாஸ் மாஸ்வான், பிரகாஷ் அம்பேத்கார், சித்தபாசு, கன்சிராம், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர்வீரமணி, சிவாஜிகணேசன், ப. நெடுமாறன் எஸ். திருநாவுக்கரசு போன்றவர்கள் கலந்துகொள்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு பல்வேறு வகையில் பொருட்சேதம், உயிர்ச்சேதம் என பல வழிகளில் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதைப்பற்றி இந்திய அரசோ இங்குள்ள அரசோ சிறிது கூட அக்கறை காட்டவில்லை. இந்த நிலை தொடருமானால் தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும்.

எல்லா உயிர்களுக்கும் வாழ்வுரிமையுண்டு ஆனால், தமிழ் மக்களுக்கு இல்லை. இதைச் சுட்டிக் காட்டத்தான் இந்த மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாடு எந்தக்கட்சிக்கும் எதிரானதல்ல. எந்தமாநாட்டுக்கும் போட்டியாகவும் நடத்தப்படவில்லை எனவே மற்ற மாநாடுகளோடு இதை ஒப்பிடக் கூடாது.

காவிரி பிரச்சினை, கர்நாடக தமிழர்களின் பிரச்சினை, தமிழக கடலோரங்களில் இந்திய, இலங்கை ராணுவத்தினரின் தொல்லை, இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினை போன்ற தமிழர் வாழ்வுரிமை பாதிப்பு குறித்து விவாதிக்க வேண்டியது உடனடி அவசியமாகும்.

திராவிட இயக்கங்கள்என்ற பெயரால் ஆட்சி செய்தவர்கள் மேடைப் பேச்சாலும், எழுத்தாலும் மட்டுமே தமிழைப் பழக்கினார்கள் தமிழுக்கு எல்லா நிலையிலும் முதலிடத்தைப் பேணி வளர்க்கவில்லை. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்றார்கள் இப்போது எங்கே தமிழ்? என்று கேட்கும் நிலைமையுள்ளது. இதையெல்லாம் மக்களுக்கு புரியவைத்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவது அவசியமாகும்.

தமிழ்நாடு பொருளாதார ரீதியில் வஞ்சிக்கப்படுகிறது. முன்பு வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்றார்கள் இப்போது தமிழகம்தேய்கிறது.

தொலைக்காட்சி, வானொலியெல்லாம் வடமாநிலத்தாரின் கட்டுப்பாட்டில் உள்ளது நமது கலாசாரத்தை அவை பிரதிபலிக்கவில்லை. அதற்கான உரிமையும் நமக்கு இல்லை மாநில அரசின் கட்டுப்பாட்டில் கல்வி இல்லை.

இப்படி மத்திய அரசு என்ற போர்வையில் நடக்கும் அநியாயத்தை தமிழ் மக்களுக்குச் சொல்ல வேண்டியதுஅவசியமாகிறது.

இந்த மாநாட்டிற்குப் பிறகு பிரச்சினைகளுக்குத் தேவையான போராட்டத்தை நடத்த பாட்டாளிமக்கள் கட்சி தயங்காது என்றும்அவர்கள் தெரிவித்தார்கள்.

## தென் சீனக் கடலில் ஐந்து நாடுகள் ஒத்திகை

(சிங்கப்பூர்)

ஐந்து நாடுகள் கலந்து கொண்ட பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சியொன்றை சிங்கப்பூர் நேற்று முன்தினம் நடத்தியுள்ளது. மலேசியா, சிங்கப்பூர், நியூசிலாந்து அவுஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் கலந்து கொண்ட இவ் ஒத்திகை நிகழ்ச்சி தென்சீனக் கடலில் நடைபெற்றது. முப்பத்துமூன்று போர்க்கப்பல்களும், நாற்பத்தேழுவிமானங்களும், பல்வேறு ஆகாய,கடல் மார்க்க பயிற்சிகளை இதில் மேற்கொண்டன. கடற்படை மற்றும் விமானப் படையைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் பேர் இவ்விசேட பயிற்சியில் பங்கு பற்றினர்.

## தொழிற்சங்க தலைவரின் முகத்திற்கு அசிட் வீச்சு

இரவு நேரத்தில் தொழிற்சங்க தலைவர் ஒருவரின் வீட்டைத்தட்டி பொலிஸார் வந்திருப்பதாக கதவைத்திறக்குமாறு கூறிய கோஷ்டி ஒன்று தலைவர் கதவைத்திறந்ததும் தலைவரின் முகத்தில் அசிட் திராவகத்தை ஊற்றி விட்டு தப்பி ஓடிய சம்பவம் ஒன்று தெஹியோவிட்ட சப்புமால் கந்த தோட்டத்தில் நடைபெற்றுள்ளது.

அசிட் வீச்சுக்கு இலக்கான தொழிற்சங்கத் தலைவரான ஆறுமுகம் எரிகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான சந்தேக நபர்களைத்தேடி பொலிசார் வலை விரித்துள்ளனர்.

## சட்டமும், ஒழுங்கும் தமிழகத்தில் சீரழிவு

### சுப்பிரமணியம் சுவாமி குற்றச்சாட்டு

(டில்லி)

தமிழகத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்குத் தமிழகஅரசு தவறி விட்டது. இவ்வாறு ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி மீண்டும் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழக கடலோரப் பகுதியில் இருந்து புலிகள் டீசலையும், மருந்துப் பொருள்களையும் கடத்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## திரிபோஷாமா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய், சண்டிலிப்பாய் ஆனைக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள அகதி முகாம்களில் உள்ள ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிகள் ஆகியோருக்கும் இலவசமாக திரிபோஷாமா வழங்கப்பட்டு வருகின்றது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தை சேர்ந்த குடும்பநல சேவையாளர்கள் இந்த முகாம்களுக்கு நேரடியாகச் சென்று சுகாதார சம்பந்தமான அறிவுரைகளை தெரிவித்து வருவதுடன் திரிபோஷாமாவையும் வழங்கி வருகின்றனர். (42)

## அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தீவகப் பிரிவினரால் நாவற்குழி லவனிதா குடியிருப்பில் தீவக மாணவர்களுக்கான ‘கல்வி மேம்பாட்டுக் கழகம்’ இன்று வெள்ளிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். மேற்படி குடியிருப்பில் இயங்கும் தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆண்டு எட்டு தொடக்கம் ஆண்டு பதினொன்று வரையான மாணவர்களுக்கென ஆரம்பிக்கப்படும் இக்கழகத்தின் அங்குரார்ப்பணவைபவம் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் தீவகப் பொறுப்பாளர் திரு. சுதர்சன் தலைமையில் நடைபெறும். (22)

## இரு முன்னாள் இராணுவத்தினர் கைது

சிறிலங்கா ராணுவத்திற்கு சொந்தமான துப்பாக்கியை விற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டும், கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டும் இரு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரி-56 ரக துப்பாக்கி ஒன்றையும், 30 தோட்டாக்களையும் திசமஹாராம பகுதியில் உள்ள ஒருவருக்கு 50,000 ரூபாவிற்கு ஒரு இராணுவ சிப்பாய் விற்றார் என்றும் மற்றொரு இராணுவ சிப்பாய் நான்கு கொலைகளிலும், பதினான்கு கொள்ளைகளிலும் சம்பந்தப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

## மக்கள் இடம்

இராணுவ முகாம்கள் கிடையாது; இருப்பதெல்லாம் இராணுவத் தளங்கள்தான் இவற்றை இராணுவக் கிராமங்கள் அல்லது இராணுவக் குடியிருப்புக்கள் என்றும் கூறலாம்.

கடந்த மாதம் மாதகலை இராணுவம் பிடித்தபோது இராணுவத்திற்குச் சார்பான விமர்சகர் றோகான் குணசேகர 80 ஆம் ஆண்டு மாதகலில் இருந்த சிறு இராணுவ முகாம் விலக்கிக் கொள்ளப்பட்டதின் பின் மறுபடியும் இப்பொழுதுதான் இராணுவம் மாதகலிற்கு வந்துள்ளது என்று கூறுகிறார் 80 ஆம் ஆண்டு மாதகல் கிராமத்தில் ஒரு சிறிய முகாமே இருந்தது- ஆனால் இன்று முழு மாதகல் கிராமமுமே ஒரு இராணுவ முகாமாக - ஒரு இராணுவக் கிராமமாகக் காணப்படுகிறது என்றும் அவர் கூறுகிறார்- (ஐலண்ட் - 23 -ஓகஸ்ட்) இது ஒரு தசாப்த காலத்துக்குப் பின்னான போரின் வளர்ச்சியைக் காட்டுகிறது- இத்தகைய இராணுவக் கிராமங்களிற்குள் சென்று குடியிருப்பதற்குத் தமிழர்கள் தயாரா? மிக மோசமானதொரு சமரின் பின் துருப்புக்கள் கச்சேரியையோ, அல்லது போதனா வைத்தியசாலையையோ கைப்பற்றினாலும் கூட கைவிடப்பட்ட அனேகமாகச் சிதைந்த கட்டிடத் தொகுதி ஒன்றைத்தான் அவர்களால் பிடிக்க முடியும். அங்கிருந்து கொண்டு சிவில் எந்திரத்தை எப்படி இயக்க முடியும்? தீவுப்பகுதியிலிருந்து வரும் கடிதங்களின் படி அனேகமான தீவுகள் ஒரு விதத்தில் முதியோர் விடுதிகளாகி விட்டதுபோலத் தெரிகிறது இராணுவம் யாழ். குடாவில் கைப்பற்றிய நிலப்பரப்புகள் எல்லாவற்றிலும் இதே கதைதான். கைவிடப்பட்ட கிராமங்களைக் கைப்பற்றும்போது துருப்புக்களிற்குண்டாகும் வெற்றியுணர்வைவிடவும் அந்தக் கிராமங்களின் மௌனமும், ஆளரவமற்ற தெருக்களில் அலையும் வளர்ப்பு நாய்களின் ஊளையொலியும் உணர்த்தும் சலிப்புக் கலந்த தோல்வியுணர்வே வலியதாக இருக்கும். வடமராட்சியில் ஒபறேஷன் லிபறேஷனின் பிறகு, அது பற்றிக் கூறிய கேணல் சுனில் பீரிஸ் இராணுவ ரீதியாக அது ஒரு பெரிய வெற்றி எனினும் அரசியல் ரீதியாக அது ஒரு படுதோல்வி என்று வர்ணித்துள்ளார். ஏனெனில் துருப்புக்கள் கைப்பற்றிய நிலப்பரப்பினுள் மீளக்குடியமர்வதற்குத் தமிழர்கள் தயாராக இருக்கவில்லை என்பது அரசியல் ரீதியாக ஒரு தோல்வியே என்று சுனில் பீரிஸ் கூறினார்.

சுனில் பீரிஸ் ஒப்பறேஷன் லிபறேஷனில் முக்கிய பாத்திரத்தை வகித்தவர்- பின்னர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார்- இவரைப் போலவே திபேந்தர் சிங்கும் (ஐ- பி- கே- எவ்- தளபதியாக இருந்தவர்) இராணுவ வெற்றிகளுக்கு அப்பால் நின்றுசிந்திக்க முயன்றவர் யாழ்நகரத்தைப் பிடித்ததும் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி இந்திய ராஜதந்திரிகளையும், அரசியல் வ திகளையும் வற்புறுத்தியவர்- ஆனால் ஒருவரும் அவரைச் செவிமடுக்கவில்லை- இப்பொழுதும் சுனில்பீரிஸின் அனுபவ வார்த்தைகளை இலங்கை இராணுவ உயர் பீடம் நினைவில் வைத்திருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் தொடர்ந்தும் யுத்தத்தின் வழியிலேயே சிந்திக்கிறார்கள். “விதி எமது வழியைப் பின்தொடரும் போது, அது சவரக்கத்தியைக் கையில் வைத்திருக்கும் ஒரு பைத்தியக்காரனைப் போலத் தொடர்ந்து வரும்” என்று ஆர்செனி தார்க்கோவ்ஸ்க்கி கூறியது போல.

அணு ஆயுத உடன்பாடு;

## பாக். உடன்படாவிட்டால் உதவிகள் நிறுத்தப்படும்

### அமெரிக்கா தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

அணு ஆயுதம் தொடர்பாக அமெரிக்காவுடன் ஒரு தீர்வு ஏற்படாதவரை பாகிஸ்தானில் அமெரிக்க உதவிபெறும் திட்டங்கள் இரண்டு ஆண்டுகளுக்குள் நிறுத்தப்பட்டுவிடும் என்று இஸ்லாமாபாத்திடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

அமெரிக்காவிடம் இருந்து தொடர்ந்து நிதியுதவி கிடைக்காவிட்டால்விவசாயம், கிராம வளர்ச்சி, பொறியியல், சுகாதாரம் மக்கள்தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்துவது, சத்துணவு மற்றும் எரிசக்தி துறைகளின் பணிகள் மோசமாகப் பாதிக்கப்படும் என்று பாகிஸ்தானின் அமெரிக்க நிதியுதவி திட்டத்தின் இயக்குநர் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் கடுமையான விளைவுகளை எதிர்நோக்கும்

### -சவான் எச்சரிக்கை

(டில்லி)

எல்லைக்கு அப்பால் இருந்து காஷ்மீர் பள்ளத்தாக்கிற்குள் ஊடுருவல்முயற்சி எதனையும் ஊக்கப்படுத்தினால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் எச்சரித்துள்ளார்-

நேற்று முன்தினம் டில்லியில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்சினையை சர்வதேச அமைப்பில் எழுப்ப அனுமதிக்கப்பட மாட்டாது என்றும்,

காஷ்மீர் பிரச்சினை இருதரப்புப் பிரச்சினை என்பதனை ஒப்புக்கொள்ளுமாறு பாகிஸ்தானை இணங்கச் செய்ய வேண்டும் என்றும்,

சிம்லா ஒப்பந்தத்திற்கு உட்பட்ட வகையில், இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுக்கள் நடத்தி அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.



மணலாற்றில் நேற்று முன்தினம் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் ஒரு பகுதியைக் காணலாம்.

# குறுகிய காலத்தில் அபாரவளர்ச்சி காவல்துறை கண்டுள்ளது

**-நடேசன்**

(யாழ்ப்பாணம்)

''தமிழீழ விடுதலைப் போராட்டம் உச்சநிலை அடைந்துள்ள இன்றைய நிலையில் தமிழீழக் காவல்துறை குறுகிய காலததில் அபார வளர்ச்சி அடைந்துள்ளது இவ் வளர்ச்சிக்கு காரணம் தமிழீழததேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரன் அவர்களின் சிறந்த வழிகாட்டலே'' இவ்வாறு தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் அவர்கள் தெரிவித்தார்.

## யாழ்.குடாவில்வெற்றி

இக்குறுகிய காலத்தில் குடாநாட்டில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் கணிசமான வெற்றியை காவல்துறை பெற்றுள்ளது இக்காலப் பகுதியில் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளையும் பிணக்குகளையும் மக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது அததுடன் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்தி ''பதுக்கல்'' நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுத்தன் மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் மக்களுக்கு கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. வீதி விபத்துக்கள் குறைக்கப்பட்டன.

## நல்வழிப்படுத்தல்

மேலும் எமது சமுகத்தில் உள்ள பல்வேறு சமுகப் பிரச்சினைகளான பெண்களுக்கெதிரான வன்முறை நடவடிக்கைகள் மற்றும் சாதிப் பாகுபாடுகளால் உருவாகும் பிரச்சினைகள்போன்ற பல்வேறு பிணக்குகளுக்கும் நியாயமான சமூகம் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வுகளை காவல்துறையினர் கண்டுள்ளனர் இதன் மூலம் மேற்படி குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை நல்வழிப் படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது

## மக்கள் ஒத்துழைப்பு

சிறிலங்கா அரசின் பொருளாதாரத்கடை நடவடிக்கை காரணமாக சமூகத்தில் தோன்றிய வறுமையிலும்கூட எமது மக்கள் கட்டுப்பாடான வாழ்வு முறையை கையாண்டதன்மூலமும் சடடம் ஒழுங்கைக்கடைப்பிடித்ததன் மூலமும்காவல் துறையினருக்கு பூரணஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளனர் எனினும் சில பகுதிகளில் உருவாகிய சமுதாயப் பிரச்சினைகளுக்கு சில பொது அமைப்புக்களுடன் காவல்துறையும் இணைந்து ஏற்ற தீர்வு காணப்பட்டது அத்துடன் இவ்வாறான குற்றச் செயல்கள் ஏற்படாத வகையில் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

## காவல்துறை விஸ்தரிப்பு

மேற்படி பணிகளைத் தொடர்வதற்காக காவல்துறை விஸ்தரிக்கப்பட உள்ளது. யாழ் குடாநாட்டில் நாகர் கோயில், பளை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளிலும், வன்னிப்பிராந்தியத்தில் கிளிநொச்சியிலும் காவல் துறையின் புதிய பணிமனைகள் விரைவில் திறக்கப்பட உள்ளன அதேவேளை காவல் துறைக்கு புதிதாக ஆட்களைச் சேர்த்துக்கொள்வதும, பயிற்சி வழங்குவதும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது (க.பா)

## மரண அறிவித்தல்கள்

### R. நவரத்தினம் (ஆசிரியர்)

சோமசுந்தரப்புலவர் வீதி, நவாலி வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவரும், எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் மெமோறியல் பாடசாலை ஆசிரியர் R நவரத்தினம் நேற்று (10-09-92) சிவபதம் அடைந்தார். இவர் காலஞ்சென்ற இராசையா நல்லம்மாவின் அருமைப் புதல்வனும், இந்திராணியின் அன்புக் கணவரும், நரேந்திரன், இந்துசாவின் அன்புத் தந்தையும், தவமலரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற K. கந்தையா, திருமதி கந்தையாவின் மருமகனும் செல்வராசா, திருமதி K செல்வராசாவின் மைத்துனரும், K. செல்வராசாவின் (காலஞ்சென்ற கிராமசேவையாளர்) சகலனும். திருமதி சாம்பசிவம், திருமதி சதிரமலை ஆகியோரின் மைத்துனருமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்

தகவல்
திருமதி N. இந்திராணி
(மனைவி)

[சி-5034]

### திருமதி கிருஸ்ணபிள்ளை பாக்கியம்

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கிளிநொச்சி கனகபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி கிருஸ்ணபிள்ளை பாக்கியம் 07-09-1992 திங்கட்கிழமை காலமானார். இவர் கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், செல்லம்மா, சரஸ்வதியின் சகோதரியும் சுப்பிரமணியம் (கணேசா ஸ்ரோர்ஸ், பரந்தன்), இராஜேந்திரம் (கிளிநொச்சி செயலகம்) ஆகியோரின் மைத்துனியும், நாகேந்திரராஜா (கனடா), ராதாராணி (புலோலி), ரதிராணி (லண்டன்), தயாநிதி (ஆசிரியை கனகபுரம்), உமாநிதி, விஜயாநிதி ஆகியோரின் பெரிய தாயாரும், ஈஸ்வரிதேவி (கனடா), சந்திரகாந்தன் (புலோலி), பத்மநாதன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், நித்தியா, திவ்யா, சுகந்தினி, சிவக்கண்ணன், செந்தூரன், அஜந்தன் ஆகியோரின்பேர்த்தியாரும்ஆவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல 28, கனகபுரத்தில் 08-09-1992 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்
இ. இராஜேந்திரம்

(3162)

## பாதுகாபபு

பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரட்னா கொல்லபபட்டதைத் தொடர்ந்து பிரதம மந்திரியும், நிதிஅமைச்சருமான டி.பி. விஜயதுங்க இப்பதவிக்கு நியமிககப்பட்டிருந்தது தெரிந்ததே.

விரைவில் சிறிலங்கா அமைச்சரவையில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வுள்ளன. இம் மாற்றங்களின்போதே இப்பதவியிலிருந்து டி. பி. விஜயதுங்க நிறுத்தப்பட்டு அவ் இடத்திற்கு ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படுவார் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதியின்

சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகளின் இறுதிச்சடங்குகள் அண்மையில் கனத்தையில் நடைபெற்ற போது இடம்பெற்ற தாக்குதல்களை சிறிலங்கா இராணுவத்தினரே மேறகொண்டனர் என குற்றப்புலனாய்வுத்துறையினர் மேற்கொண்ட புலன் விசாரணையிலிருந்து தெரியவந்ததை அடுத்தே சிறிலங்கா ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்பு, விசேடபயிற்சி பெற்ற பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கனத்தைச் சம்பவத்திற்கும் எதிர்க்கட்சியினருக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பது தெரிய வந்துள்ளதுடன் சிவில் உடை அணிந்த இராணுவத்தினரே இதனைத் திட்டமிட்டு நடாத்தினர் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது

இதே வேளை தற்போது வெற்றுத் துப்பாககி ஏந்திய இராணுவத்தினர் மடடுமே வாசல்களின் இரு புறத்திலும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர் எனபது குறிப்பிடத்தக்கது.

## வீரச்சாவு



### 2ஆம் லெப். சூலாமணி

மணலாற்றுப்பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நேரடி மோதலில் 2-ம் லெப் சூலாமணி (சம்பத்) (சுப்பிரமணியம், விக்னேஸ்வரன், நானாட்டான் மன்னார்) என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவரிற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## பிரபாகரனே

எனும் தலைப்பே எடுத்துக் கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய அரசு தடை செய்துள்ளதை பாட்டாளி மக்கள்கடசி எதிர்க்கிறதுஇதை இலங்கைத் தமிழர்களின் ஒட்டுமொத்த நலனைக் கருத்தில் கொண்டு அரசு பார்க்க வேண்டும் என்றார் இறுதியாக இம்மாநாட்டில் உரைநிகழ்த்தியவர்கள் அனைவரும் தமிழர்களுக்கென தாயகம் ஒன்று தேவை என்பதைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டனர்.

## இந்தியா தீவிரம்

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை துரிதமாக அனுப்பும் நடவடிக்கையில் இந்தியா ஈடுபடும் என இந்திய அதிகார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த திங்களன்று 130 பேரும் செவ்வாயன்று 130 பேரும் விமான மூலம் திருமலை அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் மேலும் 3000 பேர் வரையில் விமான, கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது

## முத்தமிழ்

மு வே யோ. வாஞ்சிநாதன், திருமாறன், இளந்திரையன், செல்விகள் ஜெயா, தமிழவன், உதயலக்சுமி, ஈழப்பிரியா, வசந்தா ஆகியோர் கலந்துகொள்கின்றனர்

இதனைத் தொடர்ந்து இடம்பெறும் கலை அரங்கில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணிப் போராளிகள் வழங்கும் 'சீதன அம்புகள்' நாட்டிய நாடகமும் யாழ். நாடக அரங்கக் கல்லூரி வழங்கும் குழந்தை மசண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்' நாடகமும் இடம் பெறும்.

## இராணுவ

கொல்லபபட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், பாதையும் (பெரி) அதில் நின்ற றக் வண்டியும் சேதமடைந்ததாகவும் தெரிய வருகிறது.

இக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் 22 சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் இதில் 19 இராணுவத்தினருடையதெனவும், மூன்று பொது மக்களுடையது எனவும் தெரிவிக்கபபட்டுள்ளது.

## இடமாற்றம்

### பண்டத்தரிப்பு ஸ்ரீ முருகன் லோன்றி

தற்பொழுது கீழ்க்காணும் விலாசத்தில் இயங்கி வருகின்றது வாடிக்கையாளர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

பண்டத்தரிப்பு ஸ்ரீ முருகன் லோன்றி
197/A பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்;
இ. சின்னத்துரை

(3153)

## கலை நிகழ்ச்சி

12-09-92 சனிக்கிழமை மாலை 2 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தினால் நிறைவு செய்யப்பட்ட பயிற்சி நெறியின் நிறைவாக இடம் பெறும் கலை நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் மீண்டும் 16-09-92 (புதன்கிழமை) புதிய பயிற்சி வகுப்பு ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி
துணைநிலையம்
இல. 92, ஐயனார் கோவிலடி,
வண்ணார் பண்ணை
யாழ்ப்பாணம்.

[சி-5035]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 10-09-92

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
24-4350, 24-6533, 42-1059, 27-6439, 24-3364, 26-3046, 28-3969, 26-536, 27-9033, 26-594, 26-6335, 24-4153, 28-3233, 41-9480, 24-6759, 26-5157

### 09-09-92 அன்று பிந்திக் கிடைத்தவை

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
26-5563, 24-9938, 24-7087, 24-4560, 27-9825

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.